# திருமறைத்தீபம்

BIBLE LAMP

மலர் 4 அக்டோபர் – டிசம்பர் 1998 இதழ் 4



ஜோன் கல்வின்

# திருமறைத்தீபம்

Issue No.4 of 1998

ISBN 1173-7255

காலாண்டுக்கொருமுறை வெளிவரும் திருமறைத்தீபம் சவரின் கிறேஸ் வெளியீடுகளினால் வெளியிடப்படுகின்றது. வேதசத்தியங்களை எடுத்துரைத்து கிருபையின் தேவனை மகிமைப்படுத்துவதே பத்திரிகையின் தலையாய நோக்கம்.

பத்திரிகையின் பெயர் குறிப்பிடப்படாத ஆக்கங்கள் அனைத்தும் ஆசிரியரால் எழுதப்பட்டவை. ஆசிரியரின் எழுத்துமூல அனுமதியின்றி பத்திரிகையின் எப்பகுதியையும் எவ்விதத்திலும் பிரசுரிக்கக்கூடாது.

வருட சந்தா: நியு. $16.00

**ஆசிரியர்: ஆர். பாலா**
**Editor:** R. Bala
**Publishers:** Sovereign Grace Publications
**Address:** Bible Lamp
P. O. Box 62 159
Sylvia Park
Auckland 1006
New Zealand
**Tel & Fax:** 64 9 527 1522
**email:** bala@ihug.co.nz

**கொள்கைகளையும், கோட்பாடுகளையும் புறக்கணித்து, சத்தியத்தை வெளிப்படையாக எடுத்துக் கூறாத ஒரு பத்திரிகையை இலக்கியத் தடங்கல் என்றுதான் கூற வேண்டும்.**

*- சி. எச். ஸ்பர்ஜன் -*
*(1834-1892)*

## ஆசிரியருரை:



ஆசிரியரின் பலவித ஊழியப் பொறுப்புகளால் இவ்விதழைத் தயாரிப்பதில் காலதாமதம் ஏற்பட்டது. ஆகவே, வாசகர்கள் காலதாமதமாகவே இவ்விதழைப் பெற்றுக் கொள்ள நேரிடும். தொடர்ந்து பல பொறுப்புகளுக்கு மத்தியில் பத்திரிகையைத் தயாரித்து வெளியிட எம்மை வழி நடத்திவரும் தேவனுக்கு நாம் நன்றி செலுத்துகிறோம். பத்திரிகையின் எதிர்காலத் திட்டங்களைப்பற்றி 6 ஆம் பக்கத்திலும் 18 ஆம் பக்கத்திலும் எழுதியுள்ளோம். எமது கட்டுப்பாட்டையும் மீறிய காரணங்களால் பத்திரிகையின் விநியோகத்தைக் குறித்த சில முக்கியமான நடவடிக்கைகளை எடுக்க நேரிட்டுள்ளது. வாசகர்கள் எமது நிலை உணர்ந்து, தொடர்ந்து இவ்வூழியத்திற்காக ஜெபிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இவ்விதழில் வழமையாக வரும் கட்டுரைகளைத்தவிர, கடந்த இதழில் அறிவித்தபடி புதிதாக 1689 விசுவாச அறிக்கையின் முதல் அதிகாரத்தின் விளக்கவுரையைக் காணலாம். இது கிறிஸ்தவ அன்பர்களின் இறையியல் அறிவு வளரத் துணை புரியும் என்று நம்புகிறோம். உள்ளூர் திருச்சபைகள் எதை விசுவாசிக்க வேண்டும், எந்த அடிப்படையில் சுவிஷேசப்பணியில் ஈடுபட வேண்டும் என்று தெளிவாக அறிந்து கொள்ளவும் இது உதவும். நியூஜேர்ஸியில் சீர்திருத்த பாப்திஸ்து சபைப் போதகராகப் பணியாற்றி வரும் எமது நண்பர் ஜோன் ரூத்தர் முதலாவது அதிகாரத்திற்கான விளக்கவுரையை எழுதியுள்ளார்.

"கூடில்லாத குருவிகள்" என்ற தலைப்பில், இன்று தமிழ் கிறிஸ்தவ உலகெங்கும் பெருகிக் காணப்படும் "சொந்த ஊழியங்கள்" பற்றி ஆராய்ந்துள்ளோம். வேதபோதனைகளில் கவனம் செலுத்தாது, வெறும் ஆர்வத்தின் அடிப்படையில் தவறாக, சொந்தமாக, ஊழியங்களை ஆரம்பித்துக் கொள்ளுகிறவர்கள் மனம் திருந்த இக்கட்டுரை துணை புரிய வேண்டுமென்பது எமது எதிர்பார்ப்பு. இதற்காக, எவரும் ஊழியத்தில் ஈடுபடக்கூடாது என்று நாம் சொல்ல வரவில்லை. ஊழியத்தை சபை மூலமாக அனைவரும் செய்ய வேண்டும் என்ற வேத போதனையையே நாம் வலியுறுத்தியுள்ளோம். இதுவரை வந்த இதழ்களைப்போலவே, இவ்விதழும் வரும் புத்தாண்டில் உங்கள் கிறிஸ்தவ வாழ்வில் ஒளியேற்ற ஜெபிக்கிறோம்.

# 1 கொரி. 12–14

## (ஆவிக்குரிய வரங்களைப் பற்றிய விளக்கம்)

இ கடந்த இதழில் வேதத்தை முறையாகப் படித்து விளங்கிக்கொள்ள அவசியமான விதிகளைப் பார்த்தோம். வேதம் தெளிவாகப் போதிக்கும் இவ்விதிகளைப் பயன்படுத்தி வேதத்தைப் படிக்கத் தவறியாதலேயே இன்று அநேகர் ஆவிக்குரிய வரங்களைப்பற்றிய சரியான அறிவில்லாமல், எதை எதையோ நம்பி வீண் போய்க் கொண்டிருக்கிறார்கள். இவ்விதிகளைப் பயன்படுத்தி வேதத்தைப் படிக்கும்போது ஆவிக்குரிய வரங்களைப்பற்றிய சரியான அறிவை நாம் அடையலாம்.

### சந்தர்ப்ப அமைவு

ஆவிக்குரிய வரங்களைப்பற்றிய போதனையை அளிக்கும் *1 கொரி.12-14* வரையிலான அதிகாரங்களை நாம் ஆராயும்போது, அவ்வதிகாரங்கள் எத்தகைய சந்தர்ப்பத்தில் எழுதப்பட்டுக் காணப்படுகின்றனவோ அதன் அடிப்படையிலேயே ஆராய்தல் வேண்டும். ஒரு வேதப்பகுதியை அது அமைந்துள்ள சந்தர்ப்பத்தின் அடிப்படையில் படிக்காவிட்டால் அப்பகுதியின் போதனையை நாம் ஒரு போதும் சரிவரப்புரிந்து கொள்ள முடியாது. ஆகவே, ஆவிக்குரிய வரங்களைப் பற்றிய முக்கியமான போதனையை அளிக்கும் *1 கொரிந்தியர் 12-14* வரையிலான அதிகாரங்கள் எத்தகைய சந்தர்ப்பத்தில் அமைந்து காணப்படுகின்றன என்று பார்ப்போம்.

*1 கொரிந்தியர் 12-14* ஆவது வரையிலான அதிகாரங்களில் காணப்படும் போதனைகளைப் புரிந்து கொள்ள *1 கொரி. 11* ஆவது அதிகாரத்தில் தரப்பட்டுள்ள போதனைகளை நாம் கருத்தில் கொள்வது அவசியம். இவ்வதிகாரத்தில் அப்போஸ்தலனான பவுல் தரும் போதனை இனிவரப்போகும் அதிகாரங்கள் அமைந்துள்ள சந்தர்ப்பத்தைப் புரிந்து கொள்ள உதவுகின்றது. பதினோராவது அதிகாரத்தை பொதுவாக நாம் இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

*1. 11:1-16* திருச்சபை தவிர்ந்த, ஏனைய பொதுவான இடங்களில் (ஆணும் பெண்ணும் கூடிவரும் போது) ஆணும் பெண்ணும் நடந்து கொள்ள வேண்டிய முறை.

*2. 11:17-14:40* திருச்சபை கூடிவரும்போது ஆணும் பெண்ணும் நடந்து கொள்ள வேண்டிய முறை.

இவ்வாறு இவ்வதிகாரத்தைப் பிரித்துப் படிப்பது அவசியம். இங்கே உடனடியாக இரு கேள்விகளுக்கு நாம் பதிலளிக்க வேண்டும். முதலில் இப்பகுதியில் காணப்படும் போதனை என்ன? இரண்டாவது, இப்பகுதியை இவ்வாறு இரு பிரிவுகளாகப் பிரித்துப் பார்க்க வேண்டிய அவசியம் என்ன?

### 1 கொரிந்தியர் 11:1-16 தரும் போதனை

இப்பகுதியை மேலெழுந்தவாரியாகப் படிக்கும்போது இது பெண்கள் தலையில் முக்காடு போடுவதைப்பற்றிப் பெசுவதுபோல் தென்படலாம். இவ்விதமாக இப்பகுதியைப்புரிந்து கொண்டு சபையில் பெண்கள் முக்காடு போடுதல் அவசியம் என்று வற்புறுத்தி வருவோர் அனேகர். ஆனால் உண்மையில் இப்பகுதி போதிப்பதுதான் என்ன? இப்பகுதியைக் கூர்ந்து நோக்கினால் இதற்கும் *14* ஆவது அதிகாரத்தின் *34, 35* ஆவது வசனங்களுக்கும், *1 தீமோ. 2:11-15* ஆவது வசனங்களுக்கும் பெருந்தொடர்பிருப்பதை அறியலாம். இப்பகுதிகள் அனைத்தும் ஒரே காரியத்தைக் குறித்து ஒருமித்துப் பேசுவதைப் பார்க்கலாம். அதுதான் என்ன? படைப்பில் கர்த்தர் ஆணையும், பெண்ணையும் வித்தியாசமாகப் படைத்தது மட்டுமன்றி அவர்கள் இருவருக்கும் வித்தியாசமான பொறுப்பையும் அளித்துள்ளதையும் இப்பகுதிகள் போதிக்கின்றன. அதாவது, ஆணை முதலில் படைத்த கர்த்தர் அவனுக்குத் தலைமைப் பதவியை அளித்து அனைத்தையும் ஆளும் பொறுப்பையும் அளித்தார். அதேவேளை, அடுத்து அவனில் இருந்து பெண்ணைப் படைத்த கர்த்தர், பெண் ஆணுக்கு அமைந்து நடக்க வேண்டும் என்று பணித்தார்.

கர்த்தரின் படைப்பு போதிக்கும் இவ்வுண்மையையே இம்மூன்று வேதப்பகுதிகளும் போதிக்கின்றன. இதன் அடிப்படையில் பவுல் *1 கொரி. 11:1-16*

வரையிலான வசனங்களில் கர்த்தர் ஆணுக்குத் தலைமைப்பதவியை அளித்திருப்பதை வற்புறுத்தி, ஆணும் பெண்ணும் கூடிவரும் அனைத்துப் பொதுவிடங்களிலும், பெண்கள் ஆணுக்கு அமைந்து நடக்க வேண்டும் என்று போதிக்கிறார். இங்கே "முக்காடு" என்பது பெண் ஆணுக்கு அமைந்து நடப்பதற்கான அடையாளத்தையே வலியுறுத்துகிறது. அதனால்தான் ஆண் முக்காடிட வேண்டிய அவசியமில்லை என்று பவுல் போதிக்கிறார். அத்தோடு, இப்பகுதியில் முக்காட்டிற்கும் தலைமயிருக்கும் தொடர்பிருப் பதைப் பார்க்கலாம். ஏனெனில் 15 ஆவது வசனம் பெண்ணுக்கு தலை மயிர் முக்காடாகக் கொடுக்கப்பட்டிருப்பதாகப் போதிக்கிறது. அத்தோடு, ஆண் மயிரை நீளமாக வளர்க்கக் கூடாது என்றும் பவுல் போதிக்கிறார். ஆகவே, இவ்விரண்டும் ஒரே காரியத்தைக் குறித்துப் பேசுவதைப் பார்க்கலாம். இதனை நாம் புரிந்து கொண்டால் இப் பகுதியின் போதனையை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.
ஆகவே, பவுல் இப்பகுதியில் தரும் போதனை என்னவெனில், கர்த்தர் ஆணைப் படைத்து அவனுக்குத் தலைமைப் பதவியை அளித்துள்ள தால், பெண் ஆணுக்கு அமைந்து நடத்தல் அவசியம் என்றும், அதற்கு அடையாளமாக கர்த்தர் இயற்கை யாக அளித்திருக்கும் நீளமான மயிரைப் பெண்கள் குட்டையாக வெட்டிக் கொள்ளக் கூடாது என்றும் தெரிவிக்கிறார். அதே வேளை, ஆண்கள் தங்களுக்குக் கர்த்தரால் அளிக்கப்பட்டுள்ள தலைமைப் பதவியை அங்கீகரித்து நடக்கும் விதத்தில் தங்களுடைய தலைமயிரை நீளமாக வளர்க்காமல் இருக்க வேண்டும் என்றும் தெரிவிக்கிறார். பெண்ணுக்குத் தலைமயிர் இயற்கையாகவே முக்காடாக இருப்பதால் ஆண், பெண்ணைப் போல் தலை மயிரை வளர்த்து முக்காடு போட்டது போல் தென்படுவது தனது தலைமைப்பதவியையும், அதிகாரத்தையும் துஷ்பிரயோகம் செய்வதற்கு ஒப்பானதாகும்.

> **ஆணும், பெண்ணும் கூடிவரும் இடங்களில் பெண்கள் ஆண்களை மதித்து நடக்க வேண்டும்.**

இதன் அடிப்படையில் பார்க்கும்போது, நான்காவது வசனம், ஆண்கள் தீர்க்க தரிசனம் செய்கிற போதும், ஜெபிக்கின்றபோதும் தங்களுடைய அதிகாரத்தை நிராகரிக்கும் விதத்தில் நடந்து கொள்ளக்கூடாது என்று போதிப்பதைப் பார்க்கலாம். அவ்வாறு ஆண்கள் தங்களுடைய அதிகாரத்தை நிராகரித்து அல்லது அதற்குப் புறம்பாக நடந்து கொள்வது பெண்களைப் போல் தலைமயிரை நீளமாக வளர்த்துக் கொள்வதற்கு ஒப்பானதாகும். அதாவது, ஆண்கள் தங்களுக்குக் கொடுக்கப் பட்டுள்ள நிலையிலிருந்து விலகி நடந்து கொள்வதற்கு ஒப்பானதாகும். அதேபோல், ஐந்தாவது வசனம், பெண்கள் தீர்க்கதரிசனம் செய்யும்போதும் ஜெபிக்கும்போதும் ஆண்களுக்கு மரியாதை கொடுக்காமலும், அவர்களுக்கு முன்பாக அமைதலாக நடக்காமலும் இருப்பது முறைகேடானது என்று போதிக்கின்றது. ஆகவே, ஆண்களுக்கு முன் அமைதலாக நடப்பதற்கு அடையாளமாக பெண்கள் கர்த்தர் தமக்கு இயற்கையாகவே அளித்துள்ள நீண்ட மயிரைக் குட்டையாக கத்தரித்துக் கொள்ளாமலும், தலைவிரிகோலமாக இல்லாமல் தலை மயிரை சீராக வாரிப்பிண்ணிக் கொள்ளவும் வேண்டும் என்று தெரிவிக்கிறார்.

## சபை தவிர்ந்த பொது இடங்களில் பெண்கள் நடந்து கொள்ள வேண்டிய முறை

இப்பகுதியின், 4, 5 ஆவது வசனங்கள் ஆண்களும், பெண்களும் தீர்க்கதரிசனம் செய்வதையும், ஜெபிப்பதையும் அங்கீகரிப்பதைப் பார்க்கிறோம். ஆனால், 1 கொரி. 14 ஆவது அதிகாரத்தை நாம் பார்க்கும்போது அங்கே, 34, 35 ஆவது வசனங்களில் பெண்கள் சபை கூடிவரும்போது தீர்க்கதரிசனம் செய்வதையும், ஜெபிப்பதையும் வேதம் தடை செய்வதைப் பார்க்கலாம். பதினோராவது அதிகாரத்தில் பெண்கள் தீர்க்கதரிசனம் செய்வதற்கும், ஜெபிப்பதற்கும் அனுமதி தரும் பவுல் 14 ஆவது அதிகாரத்தில் அவற்றிற்குத் தடைவிதிப்பதன் காரணம் என்ன? இதற்குப் பதில் தர முயலும் சிலர் பவுல் தனது தவற்றை உணர்ந்து மனம்மாறி பின்பு அதற்கு அனுமதி அளிப்பதாகக் கூறுவர். ஆனால், வேதத்தை எழுத்தில் தந்துள்ள ஆவியானவர் இவ்வாறான தவற்றைச் செய்ய மாட்டார். ஆகவே, இதனை நாம் எவ்வாறு புரிந்து கொள்வது? இதனை நாம் பரிந்து கொள்ள வேண்டுமானால் பவுல், இங்கே இருவிதமான சந்தர்ப்பங்களில் ஆண்களும், பெண்களும் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்று போதிப்பதை உணர வேண்டும். 11 ஆவது அதிகாரம் முதல் பதினாறு வசனங் களும் ஆணும், பெண்ணும் சபை தவிர்ந்த பொதுவான இடங்களில் கூடிவருகின்ற வேளையில் நடந்து கொள்ள வேண்டிய முறையைப் பற்றிப் போதிக்கின்றன. ஆனால், 14வது அதிகாரம் சபை கூடிவரும்போது ஆணும் பெண்ணும் நடந்து கொள்ள வேண்டிய முறையைப் பற்றிப் போதிக்கின்றது. இதை நாம் எவ்வாறு உறுதிப்படுத்த முடியும்? 11 ஆவது அதிகாரத்தில் 17 ஆவது வசனத்தைப் பார்த்தால், அவ்வசனத்தில் பவுல் ஒரு புதிய போதனையை ஆரம்பிப்பதைப் பார்க்கலாம். அதாவது, திருவிருந்தைப் பற்றிய போதனையை அங்கே பார்க்கலாம். அப்போதனையை அளிக்க ஆரம்பிக்குமுன் பவுல் "நீங்கள் கூடிவருதல் நன்மைக்கேதுவாயிராமல், தீமைக்கேதுவாயிருக்

கிறதே" என்று கூறுவதனைப் பார்க்கிறோம். அடுத்த வசனத்தில், "நீங்கள் சபையில் கூடி வந்திருக்கும் போது" என்று, எக்கூடிவருதலைப் பற்றித் தான் குறிப்பிடுகிறேன் என்று பவுல் விளக்குவதைப் பார்க்கலாம். இவ்வதிகாரத்தின் ஆரம்பத்தில் (1-16) கொடுக்கப்பட்ட போதனை சபை கூடிவரும்போது நடந்து கொள்ள வேண்டிய காரியங்களைப் பற்றியதல்ல, ஆனால் இனிப் பவுல் கொடுக்கப் போகும் போதனைகள் (11:17-14) சபை கூடிவரும்போது நிகழ வேண்டிய காரியங்களைப் பற்றியதாகும். பவுல் பயன்படுத்தும், "சபை கூடிவரும்போது" என்ற வார்த்தைப் பிரயோகம் இப்பகுதிகளில் தரப்படும் போதனைகளைப் புரிந்து கொள்ள உதவுகின்றது. இவ்வார்த்தைப் பிரயோகம், பதினான்காம் அதிகாரம் முடியும்வரை பல தடவைகள் பயன்படுத்தப்பட்டு இவ்வதிகாரங்களில் தரப்பட்டுள்ள போதனைகள் சபை கூடிவரும்போது கடைப்பிடிக்கப்பட வேண்டியவை என்பதை நமக்குத் தெளிவு படுத்துகின்றன.

## சபை கூடிவருதலின் முக்கியத்துவம்

எனவே, பெண்கள் சபை கூடி வருதலைத் தவிர்ந்த ஏனைய பொது இடங்களில் ஆண்களுக்கு மத்தியில் பேச வேதம் அனுமதியளிக்கிறது. ஆனால் சபை கூடிவரும் போது அவர்கள் பேச அனுமதியில்லை (14:34-35). 1 கொரி. 14 ஆவது அதிகாரத்தில் "பேச்சு" என்ற வார்த்தை 24 தடவைகளுக்கு மேலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இப்பகுதியில் இவ்வார்த்தை பதினான்கு தடவைகள் அன்னிய பாஷை பேசுவதைக்குறித்தும், மூன்று முறை தீர்க்கதரிசனம் அறிவிப்பதைக்குறித்தும், ஆறு தடவைகள் பொதுவான பேச்சைக் குறிக்கவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. எனவே, பேச்சு எனும் இவ்வார்த்தை பொதுவாக எல்லாவகைப் பேச்சையும் குறிக்கப் (அன்னிய பாஷை பேசுதல், தீர்க்கதரிசனம் அறிவித்தல்) பயன்படுத்தப்பட்டுள்ளதைப் பார்க்கிறோம். அத்தோடு, அந்நிய பாஷை பேசுதல் ஜெபம் செய்வதைப் போன்றதாகும். ஆகவேதான், பவுல் பதினான்காம் அதிகாரத்தில் 13, 14 ஆம் வசனங்களில் "நான் அந்நிய பாஷையில் ஜெபிக்கும் போது" என்று கூறுவதைப் பார்க்கிறோம். ஆகவே, பதினோராம் அதிகாரத்தில் "பெண்கள் ஜெபிக்கும் போது" என்று பவுல் கூறும்போது அவர்கள் பொதுவான இடங்களில் ஜெபிக்கவும், பேசவும் அனுமதியளிக்கிறார். ஆனால், சபை கூடிவரும் போது அவர்கள் எவ்விதத்திலும் பேச அனுமதியில்லை.

இங்கே சபை கூடிவருதல் என்றால் என்ன? அதன் முக்கியத்துவம் என்ன என்பதை நாம் ஆராய வேண்டும். "சபை கூடிவருதல்" என்ற பதம் பதினான்காம் அதிகாரத்திலும், கொரிந்தியர் நிருபம் முழுவதிலும் அதிகாரபூர்வமாக சபை கூடிவருதலைக் குறிக்கின்றது. அதிகாரபூர்வமாக என்பதற்குப் பொருள், கர்த்தரின் கட்டளையின்படி மூப்பர்களால் வழிநடத்தப்பட்டு சபை கூடிவருதலைக் குறிக்கும். ஆராதனைக்கூட்டங்கள், சபை அங்கத்தவர் கூட்டங்கள் இத்தகையவையாகும். இக்கூட்டங்கள் மூப்பர்களால் கூட்டப்படும் கூட்டங்களாகும். இக்கூட்டங்களில் சபை அங்கத்தவர்கள் தவறாது கலந்து கொள்ளும்படி எதிர்பார்க்கப்படுகிறார்கள். இக்கூட்டங்கள் வேதபூர்வமாக நடக்க வேண்டிய கூட்டங்களாகும். ஆண்களும், பெண்களும் கலந்து கொள்ளும் இக்கூட்டங்களில் பெண்கள் எவ்விதத்திலும் தலைமை தாங்கவோ, பேசவோ வேதம் அனுமதி தரவில்லை.

> **ஆண்களும், பெண்களுமாக சபை கூடி வரும் சமயங்களில் பெண்கள் சபையில் தலைமை தாங்கவோ, பேசவோ வேதம் அனுமதியளிக்க வில்லை.**

சாதாரணமாக கிறிஸ்தவர்கள் சபைக்கு வெளியிலும், வீட்டில் குடும்பமாகவும், கூடிவரும் கூட்டங்கள் இதில் அடங்கவில்லை. அத்தகைய கூட்டங்கள் அதிகாரபூர்வமான சபைக்கூட்டங்கள் அல்ல. அத்தகைய கூட்டங்களை சபை மூப்பர்கள் வழி நடத்துவதும் இல்லை. அத்தகைய கூட்டங்கள் கூட சபை மூப்பர்களின் அனுமதியும் அவசியமில்லை. எனவே, அதிகார பூர்வமாக கூடிவரும் சபைக் கூட்டங்களுக்கும், ஏனைய கூட்டங்களுக்கும் இடையில் காணப்படும் இம்முக்கிய வேறுபாட்டை நாம் புரிந்து கொள்ள வேண்டும். சபைக் கூட்டங்கள் அல்லாத ஏனைய சூழ்நிலைகளில் பெண்கள் அங்கிருக்கும் ஆண்களுக்கு மதிப்பளித்து வரம்பு மீறாமல் பேசவோ, ஜெபிக்கவோ முடியும். பதினோராம் அதிகாரத்திற்கு விளக்கம் கொடுக்க முனையும் அனேகர் இதனைக் கவனிப்பதில்லை.

## நாம் இதுவரை பார்த்ததற்கும் ஆவிக்குரிய வரங்களைப் பற்றி இனி நாம் அளிக்கப் போகும் விளக்கங்களுக்கும் என்ன தொடர்பு?

1. சபைக்கூட்டங்களில் நடந்து கொள்ள வேண்டிய முறை, சபைக்கூட்டங்கள் அல்லாத பொது இடங்களில் நடந்து கொள்ள வேண்டிய முறை என்று பிரித்து இப்பகுதியில் பவுல் தரும் போதனையை நாம் உணராவிட்டால் ஆவிக்குரிய வரங்களை யார், எங்கு, எவ்வாறு பயன்படுத்துவது என்பதில் நமக்குத் தெளிவு இருக்காது. கெரிஸ்மெட்டிக் கூட்டத்தைச் சார்ந்தவர்கள் இதனாலேயே வரங்களைப்பற்றியும் அவற்றை எங்கு, எப்படிப் பயன்படுத்துவது என்பது பற்றியும் அறிவில்லாமல் வேத போதனைகளுக்கு எதிராக தாம் நினைத்தவாறு நடந்து கொள்கிறார்கள்.

*2. கெரிஸ்மெட்டிக் கூட்டத்தார் ஆவிக்குரிய வரங்களை வேத போதனைகளுக்கு முரணாக தனிப்பட்ட முறையில், தமது சொந்த நோக்கங் களுக்காகப் பயன்படுத்தி வரும்போது, இப்பகுதி சபைக்கூட்டங்களில் அவை எவ்வாறு பயன் படுத்தப்பட வேண்டும் என்ற விளக்கத்திற்கான அத்திவாரத்தை இட்டு, நமக்கு வழிகாட்டி, அவர்களுடைய தவறை சுட்டிக் காட்டுகிறது.*

*3. ஆவிக்குரிய வரங்களை கர்த்தர் ஆணுக்கும், பெண்ணுக்கும் கொடுக்கின்ற போதும், இரு இனத்தாரும் அவற்றை சபையிலும், சபைக்கு வெளியிலும் இடத்தையும், சுற்றி இருப்பவர் களையும் அனுசரித்துப் பயன்படுத்த வேண்டும் என்று இப்பகுதி அழுத்தந்திருத்தமாகத் தரும் போதனைக்கு விரோதமாக கெரிஸ்மெட்டிக் கூட்டம் பெண்களை வேதத்திற்கு விரோதமாக சபையிலும், சபைக்கு வெளியிலும் வரங்களைப் பயன்படுத்த ஊக்குவிப்பதைப் பார்க்கிறோம். அத்தோடு பெண்கள் சபையில் நடந்து கொள்ள வேண்டிய முறை பற்றி பதினான்காம் அதிகாரம் அளிக்கும் விளங்கங்களை முறையாகப் புரிந்து கொள்ள இப்பகுதி துணை செய்கின்றது.*

*4. கர்த்தரின் ஆணையின்படி "சபைகூடிவருதலின்" முக்கியத்துவத்தை அறிவித்து, அவ்வாறு சபை கூடிவரும்போது அங்கு வரங்கள் எவ்வாறு? அவரது மகிமைக்காகப் பயன்படுத்தப்பட வேண்டும் என்ற, இனிவரப்போகும் போதனை களின் மெய்த்தன்மையை இப்பகுதி சுட்டிக் காட்டுகின்றது.*

*எல்லா வேதப்பகுதிகளைப் போலவும் இவ்வேதப் பகுதியையும் ஆழமாக, நுணுக்கமாக ஆராய்ந்து விளக்கம் கொடுக்க வேண்டியது அவசியமான போதிலும், ஆவிக்குரிய வரங்களைப்பற்றி இனி வரப்போகும் அதிகாரங்கள் அளிக்கவிருக்கும் போதனைகளைப்புரிந்து கொள்ள இப்பகுதி எந்தவிதத்தில் அத்திவாரமாக அமைகிறது என்பதை எடுத்துக் காட்டுவது மட்டுமே எமது நோக்கமாகும். அந்தவிதத்தில் நாம் மேலே பார்த்த விளக்கங்கள் இனிவரப்போகும் போதனை களுக்கான ஆரம்ப உரையாக அமைந்திருப்பதை எவரும் அலட்சியப்படுத்திவிட முடியாது.*

*(வளரும்)*

# பத்திரிகை பற்றிய முக்கிய அறிவித்தல்

கர்த்தருடைய கிருபையினால் கடந்த நான்கு வருடங்களாக திருமறைத்தீபத்தை இலவசமாக எம்மால் விநியோகிக்க முடிந்தது. கேட்டு எழுதியவர்களுக்கெல்லாம் இதுவரை பத்திரிகையை யும், நூல்களையும் முடிந்தவரை இலவசமாக அனுப்பி வந்துள்ளோம். சீர்திருத்தவாத சத்தியத்தைப் பலரும் அறிந்து கொள்ள பத்திரிகை செயல்பட வேண்டுமென்பதே எமது ஒரே நோக்கம். அந்நோக்கத்தால் உந்தப்பட்ட தனிப்பட்டவர்களுடைய நிதி உதவியினாலேயே இவ்வூழியத்தை தொடர்ந்து நடத்தி வருகிறோம். ஆனால், பெருகிவரும் வாசகர் எண்ணிக்கை யும், பத்திரிகையின் வெளியீட்டுச் செலவும், தொடர்ந்தும் பத்திரிகையை இலவசமாகக் கேட்டு எழுதுபவர்களுக்கெல்லாம் அனுப்ப முடியாத ஒரு தவிர்க்க முடியாத சூழ்நிலையைத் தோற்றுவித்துள்ளது. எனவே, பத்திரிகை விநியோகத்தில் சில முக்கியமான மாற்றங்களைக் கொண்டுவர வேண்டிய ஒரு நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம். வாசகர்கள் தயவு செய்து பின்வரும் மாற்றங்களைக் கருத்தில் கொண்டு, இவ்வூழியத்திற்கு துணைபுரிவதோடு தொடர்ந்து இதனை ஜெபத்திலும் தாங்குமாறு அன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

1. பத்திரிகையைத் தொடர்ந்து பெற்றுக் கொள்ளும் வாசகர்கள் தயவு செய்து அதனை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளவும். அதேவேளை, புதிதாக பத்திரிகையைப் பற்றி அறிந்து கொள்பவர்கள் தயவு செய்து எவரிடம் பத்திரிகையைப்பற்றி அறிந்து கொண்டீர்களோ அவர்களிடமே தொடர்ந்தும் அதனைப்பெற்று வாசித்துப் பயன்பெறும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். இது தபால் செலவைக் குறைக்க எமக்குப் பேருதவி புரியும்.

2. இதுவரை மேலதிக பத்திரிகை பிரதிகளைப் பெற்றுக் கொண்ட வாசகர்களுக்கு எம்மால் தொடர்ந்தும் மேலதிகமான பிரதிகளை அனுப்பி வைக்கமுடியாதென்பதையும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

மறு அறிவித்தல்வரை இவற்றை அனைவரும் பின்பற்றுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

*திருமறையின் போதனைக்கு செவி சாய்க்காது, எந்தவித சபைக்கட்டுப்பாடுமின்றி சொந்தமாக ஊழியங்களை ஆரம்பித்துக் கொள்கிறவர்களின் தொகை இன்று எண்ணில் அடங்காது. இவர்கள் செய்வது சரிதானா? இதைப்பற்றி வேதம் என்ன சொல்கிறது? என்று ஆராய்கிறது இக்கட்டுரை.*

# கூடில்லாத குருவிகள்!

**ஊழியம்**

*ஒரு விசுவாசி தான் கர்த்தருக்கு ஊழியம் செய்யவேண்டும் என்ற நோக்கத்தில் சுயமாக, எந்தவித சபைக்கட்டுப்பாடு மின்றி தன்னைத் தானே சுவிஷேசகர் என்று அறிவித்துக் கொண்டு சொந்தத்தில் ஒரு ஊழியத்தை ஏற்படுத்திக் கொள்வதே சொந்த ஊழியமாகும்.*

தனிநபர் ஊழியங்கள், சொந்த ஊழியங்கள் என்ற வார்த்தைகளை இன்று கேள்விப்படாத கிறிஸ்தவர்கள் இருக்க முடியாது. மிகச் சரளமாகவே இவ்வார்த்தைகளைப் பலரும் ஊழியங்களைக் குறித்துப் பயன்படுத்தி வருகிறார்கள். அதுவும் தமிழ் மக்கள் மத்தியில் இது அதிகமாகவே காணப்படுகின்றது. இதற்கு என்ன பொருள் என்று முதலில் பார்ப்போம். ஒரு விசுவாசி தான் கர்த்தருக்கு ஊழியம் செய்யவேண்டும் என்ற நோக்கத்தில் சுயமாக, எவ்வித சபைக்கட்டுப்பாடுமின்றி தன்னைத் தானே சுவிஷேசகர் என்று அறிவித்துக் கொண்டு சொந்தத்தில் ஒரு ஊழியத்தை ஏற்படுத்திக் கொள்வதையே இது குறிக்கும். இவ்வூழியங்களில் ஈடுபட்டுள்ளவர்கள் எந்த உள்ளூர் சபைக்கும் கட்டுப்பட்டவர்கள் அல்ல. இவ்வாறான சொந்த ஊழியங்களில் ஈடுபட்டுள்ளோர் இன்று பெருமளவில் காணப்படு கின்றனர். இக்கூடற்ற குருவிகளில் அநேகர் புதுக்கிறிஸ்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தனிநபர், சொந்த ஊழியங்களைப்பற்றி நாம் ஏன் அலட்டிக்கொள்ள வேண்டும் என்று சிலர் கேட்கலாம். தமிழ்கூறும் மக்கள் மத்தியில் கள்ளிச்செடி போல், கேட்பாரின்றி வளர்ந்து வரும் இவ்வூழியங்களுக்கு வேதத்தில் இடமுண்டா என்று பார்ப்பதே நமது நோக்கம். வேதம் அங்கீகரிக்காத, இடம்கொடாத எதுவும், எத்தனை நல்லெண்ணத்தோடு செய்யப்பட்டாலும் கர்த்தருக்குப்பிடித்தமில்லாதது என்பது, வேதம் போதிக்கும் உண்மை. அந்த அடிப்படையில் இவ்வூழியங்களை நாம் ஆராயாமல் இருக்க முடியாது. அத்தோடு, ஆரம்பத்திலேயே நாம் ஒன்றை சொல்லத்தான் வேண்டும். இத்தகைய சொந்த ஊழியங்களில் ஈடுபடும் அநேகர் நல்லெண்ணத்தோடேயே இவற்றில் ஈடுபடுகிறார்கள். எத்தனையோ கஸ்டங்களுக்கு மத்தியில், வாழ்க்கையில் சுக துக்கங்களைத் துறந்து இதில் ஈடுபடுகிறவர்கள் உண்டு. மனைவி, குடும்பத்தையும் இதற்காகப் பலியிட்டவர்களும் உண்டு. இருந்தாலும், நல்லெண்ணங்களும், தியாக மனப்பான்மையும் மட்டும் ஒரு காரியத்தை வேதபூர்வமானதாக மாற்றிவிடாது என்பதும் வேதம் தெளிவாகப் போதிக்கும் சத்தியம். இத்தகைய ஊழியங்களில் ஈடுபட்டுள்ளவர்கள் இனியாவது வேதத்தைப்படித்து தாம் செய்யும் காரியங்கள் முறையானதா? என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்பதே எமது வேண்டுகோள். இத்தனிநபர், சொந்த ஊழியங்களைப்பற்றி வேதம் என்ன கூறுகின்றது என்று பார்ப்போம்.

**எல்லா ஊழியங்களும் சபையிலிருந்தே தோன்ற வேண்டும்.**

சபை சம்பந்தமான எல்லா ஊழியங்களும் சபையில் இருந்து ஆரம்பிப்பதையே நாம் வேதத்தில் பார்க்கிறோம். கிறிஸ்து சபைக்கே தனது ஈவுகளை அளிப்பதாக பவுல் எபேசியர் 4:11–13 இல் கூறுவதைப் பார்க்கிறோம். பவுல் இங்கு சபை என்று குறிப்பிடுவது உலகெங்கும் காணப்படும் உள்ளூர் சபைகளையே. கிறிஸ்தவ சபைகளில் இன்று நிரந்தரமாக இருக்க வேண்டிய இரு அதிகாரபூர்வமான ஊழியங்களான போதகர்கள் (மூப்பர்கள்), உதவியாளர்கள் ஆகிய ஊழியங்களுக்கான ஊழியக்காரர்களை நியமிக்கும் அதிகாரம் திருச்சபைக்கு மட்டுமே உண்டு (1 தீமோத். 3; தீத்து 1). சுவிஷேசத்தை அறிவிக்கும் ஊழியம் இன்று போதக ஊழியத்தோடு இணைக்கப்பட்டுள்ளதையும் நாம் மறந்துவிடக்கூடாது. இவ்வூழியங்களுக்கான இலக்கணங்களையும் திருச்சபைக்காகப்

பவுல் எழுதிய நிருபங்களிலேயே வாசிக்கிறோம். உலகெங்கும் சுவிஷேசத்தைப் பிரசங்கித்து சீடர்களை உருவாக்கும்படி கிறிஸ்து தனது பதினொரு அப்போஸ்தலர்களுக்குக் கட்டளையிட்டதை மத்தேயு 28:16–20 இல் வாசிக்கிறோம். இப்பதினொரு அப்போஸ்தலர்களே இக்கட்டளையின்படி பின்பு யெருசெலேமுக்குப் போய் அங்கே பண்ணிரண்டாவது அப்போஸ்தலனைத் (யூதாஸின் இடத்தில்) தெரிவு செய்தபின், கர்த்தரின் வாக்குப்படி பரிசுத்த ஆவிக்காகக் காத்திருந்து, பெந்தகொஸ்தே நாளில் அவரது வல்லமையால் புதிய ஏற்பாட்டு சபையை நிறுவியதைக் காண்கிறோம். இவர்கள் அனைவருமே அன்று முதல் புதிய ஏற்பாட்டு சபையின் அங்கத்தவராக இருந்தார்கள். அப்போஸ்தலர் நடபடிகளை ஊன்றிப்படிக்கும்போது எல்லா ஊழியங்களும் சபை மக்களால் செய்யப்பட்டதையே நாம் பார்க்கிறோம்.

வேதபூர்வமாக அமைந்த ஒரு சபையால் அங்கீகரிக்கப்பட்டு, நியமிக்கப்பட்டு, அதன் கட்டுப்பாட்டின் கீழ் ஊழியம் செய்யாதவர்களால் நமது ஆன்மீக வாழ்க்கைக்கு ஆபத்துத்தான் ஏற்படும். ஏனெனில், இவர்கள் யார்? இவர்கள் உண்மையிலேயே ஊழியத்திற்கான வரத்தையும், தகுதியையும் கொண்டிருக்கிறார்களா? என்று நம்மால் கண்டுபிடிக்க முடியாது. சபையைக் கண்ணால் காணாத இவர்களைப்பற்றி எந்த சபைக்கும் தெரியாது. சபை அறியாதவர்களை கிறிஸ்துவும் அறியார். இன்று தாறுமாறாகத் திருமறையைப் படித்து விளக்கம் கொடுக்க முயல்பவர்கள் அதில் திருச்சபையைப் பார்ப்பதில்லை. அதனால், திருமறை போதிக்காத, அப்போஸ்தலர்களும் செய்ய முற்படாத, செயல்களை இன்று அவர்கள் செய்ய முற்படுகிறார்கள். எந்தவொரு சபையோடும் தொடர்பில்லாமல், ஊழியம் என்ற என்ற பெயரில் ஏதோவொன்றை ஆரம்பித்து, அதை நடத்தப்பணம் வேண்டும் என்ற ஒரு காரணத்திற்காக மட்டும் சபையை நாடி வருகிறார்கள். சபையால் செய்யமுடியாததை தாங்கள் செய்ய முயல்வதாகக்கூறி அவர்கள் தங்களை நியாயப்படுத்துவதற்குக் காரணம் சபையின் துணை அவர்களுக்குத் தேவைப்படுவதால்தான். இவ்வாறு சபைக்கு வெளியில் எதையும் ஆரம்பிப்பதே தவறு. உண்மையிலேயே ஒருவர் கர்த்தரால் ஊழியத்திற்கு அழைக்கப் பட்டிருந்தால் அவரை சபையில்தான் பார்க்க முடியும் என்பது கிறிஸ்து போதிக்கும் சத்தியம். இதைக்குறித்து நாம் வெளியிட்டுள்ள "திருச்சபை சீர்திருத்தம்" என்ற நூலில் நீங்கள் மேலும் விபரமாக வாசிக்கலாம்.

**புதிய கிறிஸ்தவர்கள் சபைகளில் சேர்ந்து வளர வேண்டுமே தவிர உடனடியாக ஊழியங்களில் ஈடுபடக்கூடாது.**

புதிய கிறிஸ்தவர்கள் சபையின் முன்னணி ஊழியங்களான போதக, பிரசங்க ஊழியங்களை உடனடியாக நாடக்கூடாது என்பது திருமறையின் போதனை (1 தீமோத். 3:6). ஒரு புதிய கிறிஸ்தவனுக்கு முதிர்ச்சியும், திருமறையில் போதிய அறிவும் இருக்காது. அவனுக்கு அதிக அனுபவம் தேவைப்படும். சபையில் அவன் போதகர்களின் கீழ் வளர்ந்து கிறிஸ்தவ வாழ்வில் அனுபவத்தையும், சபையின் சாட்சியையும் பெற்றிருத்தல் வேண்டும். இக்காரணங்களால் ஆரம்பத்திலேயே அவர்கள் இத்தகைய ஊழியங்களை நாடக்கூடாது.

சுவிஷேசத்தை அனைத்துக் கிறிஸ்தவர்களும் மற்றவர்களுக்கு சொல்ல வேண்டும் என்று திருமறை போதிக்கின்றது. ஆனால், இவ்வேத போதனையைப் பலரும் தவறாகப் புரிந்து கொள்கிறார்கள். இதை எப்படிச் செய்வதெனில், ஒவ்வொருவரும், தங்கள் வீட்டிலும், வேலைத்தளங்களிலும், கிறிஸ்துவுக்குச் சாட்சியுள்ள வாழ்க்கையை நடத்துவதன் மூலம் செய்ய வேண்டும். அத்தோடு, சமயம் கிடைக்கும்போது தேவனை அறியாதவர்களுக்கு கிறிஸ்துவைப்பற்றிக் கூற வேண்டும். கைப்பிரதிகளையும் விநியோகிக்கலாம். வாயாலும், செயலாலும் இயன்றவரை கிறிஸ்துவை அறிவிக்க வேண்டும். இவையனைத்தையும் சபையிலுள்ள ஒவ்வொரு கிறிஸ்தவனும் செய்யவேண்டிய கடமை. இவற்றைச் செய்வதற்கு கிறிஸ்தவர்களுக்கு சபையில் பதவி தேவையில்லை; சபையால் நியமிக்கப்பட வேண்டிய அவசியமில்லை. ஏனெனில், ஒவ்வொரு கிறிஸ்தவனும் கர்த்தருக்கு முன் இவற்றை செய்ய வேண்டியவனாக இருக்கிறான்.

ஆனால், சபையின் நியமனத்தைப் பெற்று செய்ய வேண்டிய பொறுப்புள்ள போதக ஊழியம், பிரசங்க ஊழியம், சபை நிறுவும் பணிகள் ஆகியவற்றை புதிய கிறிஸ்தவர்களிடம் ஒப்படைக்கக்கூடாது என்று வேதம் போதிக்கின்றது. அத்தோடு சபை வாழ்க்கைக்குத் தங்களை ஒப்புக் கொடுக்காதவர்கள் இவற்றைக் கனவிலும் எண்ணிப்பார்க்கக்கூடாது. இன்று அநேகர் சபையைக் குறைசொல்வதிலேயே காலத்தை

**ஊழியம்**

*வேதபூர்வமாக அமைந்த ஒரு சபையால் அங்கீகரிக்கப்பட்டு, நியமிக்கப்பட்டு, அதன் கட்டுப்பாட்டின் கீழ் ஊழியம் செய்யாதவர்களால் நமது ஆன்மீக வாழ்க்கைக்கு ஆபத்துத்தான் ஏற்படும்.*

## ஊழியம்

*சுவிஷேசத்தை சொல்வதற்காக மட்டும் சுவிஷேசம் சொல்லும் கட்டளை கொடுக்கப்படவில்லை (மத்தேயு 28). அதற்கு ஒரு மேலான இறுதி நோக்கம் இருந்தது. சீடர்களை ஏற்படுத்தி சபை நிறுவுவதே அந்நோக்கம்.*

வீணடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒழுங்கான ஒரு சபையைத் தேடி அதில் சேர அவர்கள் முயல்வதில்லை. பூரணமான ஒரு சபையை நாம் ஒருபோதும் இவ்வுலகில் பார்க்க முடியாது. வேதத்தை மட்டும் போதிக்க முயலும் சபையை எப்போதும் நாடிச் செல்ல வேண்டும். அப்படியொரு சபையில்லை என்று கூறி சொந்த ஊழியம் செய்யப்பார்க்கக்கூடாது. இன்று, கர்த்தர் என்னை ஊழியத்திற்கு அழைத்துள்ளார் என்று கூறி, தம்மைத்தாமே ஊழியக்காரராக்கிக் கொண்டுள்ள புதிய கிறிஸ்தவர்கள் அநேகர். சபைக்குக் கட்டுப்படாத தனிநபர் ஊழியங்கள், சொந்த ஊழியங்கள் ஆகியவற்றை திருமறையில் எங்குமே பார்க்க முடியாது. கர்த்தரைப் பிரியப்படுத்துகிறோம், அவரை மகிமைப்படுத்துகிறோம் என்ற எண்ணத்தில் தங்களைத் தாங்களே ஊழியக்காரர்களாக நியமித்துக்கொள்பவர்களுக்கு வேதம் அவ்வாறு செய்யும் அதிகாரத்தை அளிக்கவில்லை. வேதபூர்வமான சபை வாழ்க்கையை அறியாதவர்கள், சபையில் ஆராதனை செய்து பழக்கமில்லாதவர்கள், சபைக்கட்டுப்பாட்டில் வளராதவர்கள் எவ்வாறு கிறிஸ்தவ ஊழியம் செய்ய முடியும்? வேதத்திற்குக் கட்டுப்பட மறுப்போர் வேதபூர்வமான ஊழியத்தில் எவ்வாறு ஈடுபட முடியும்? மற்றவர்களை கர்த்தரின் வழியில் எவ்வாறு வழிநடத்த முடியும்?

**சுவிஷேச ஊழியம் மட்டுமே இறுதியானதல்ல.** (Evangelism is not an end in itself)

சுவிஷேத்தை அறிவிக்கும்படியாக கிறிஸ்து தனது அப்போஸ்தலருக்குக் கட்டளையிட்ட காரணம் அவர்கள் கிறிஸ்துவுக்காக சீடர்களை உருவாக்க வேண்டுமென்பதற்காகத்தான். இச்சீடர்கள் கிறிஸ்து போதித்த அனைத்தையும் கற்று வளரும் கலாசாலையாக உள்ளூர் திருச்சபையே காணப்படுகின்றது. அதனால்தான் அப்போஸ்தலர்கள் பெந்தகொஸ்தே நாளில் சுவிஷேசத்தைக்கூறி சபை நிறுவும் பணியில் ஈடுபட்டதைப் பார்க்கிறோம். கிறிஸ்துவுக்காக கூட்டங்களில் கையை உயர்த்துபவர்களை அல்ல, கிறிஸ்துவுக்காக சீடர்களை உருவாக்கி அவர்களை சபைக்குள் கொண்டுவர முயலாத சுவிஷேச ஊழியம், திருமறையில் காணப்படாத ஊழியமாகும். இன்று சுவிஷேச ஊழியம் என்ற பெயரில் சுவிஷேசத்தை வெறுமனே அறிவிப்பது மட்டுமே கடமை என்ற எண்ணத்தில் நடக்கும் பொறுப்பற்ற அனேக தனிநபர், சொந்த ஊழியங்களைக் காண்கிறோம். சுவிஷேசம் சொல்லுவது மட்டுமே எமது பொறுப்பு, அதை மட்டும் செய்தால் போதும் என்று பலரும் செயல்பட்டு வருகிறார்கள். இத்தகையவர்களிடம் சுவிஷேத்தைக்கேட்டு சீரழிந்து போனவர்கள் அனேகர். இது சுவிஷேச ஊழியத்தைத் தவறாகப் புரிந்து கொண்டதால் வந்த வினையாகும். திருமறையைப் பொறுப்போடு படித்தால் அங்கே சுவிஷேச ஊழியங்கள் சபை நிறுவுவதில் முடிந்ததைப் பார்க்கலாம். சுவிஷேத்தை ஒருமுறை ஒருவருக்கு சொல்வதோடு மட்டும் தன் கடமை முடிந்ததாகக் கருதும் சுவிஷேசப் பணியை வேதம் அறியாது. சுவிஷேசத்தை சொல்வதற்காக மட்டும் சுவிஷேசம் சொல்லும் கட்டளை கொடுக்கப்படவில்லை (மத்தேயு 28). அதற்கு ஒரு மேலான இறுதி நோக்கம் இருந்தது. சீடர்களை ஏற்படுத்தி சபை நிறுவுவதே அந்நோக்கம். கைப்பிரதிகள் கொடுப்பதோடும், புதிய ஏற்பாட்டு வேதப்பகுதிகளை கிராமவாசிகளுக்கு அளிப்பதோடும் அப்பணி முடிந்து விடுவதில்லை. இன்று, இதைச் செய்வதற்காக மட்டுமே நடக்கும் தனிநபர், சொந்த ஊழியங்களுக்கு அளவேயில்லை. இப்பணி அறைகுறையாக முடிந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் கிறிஸ்து உலகில் தனது சபையை உருவாக்கியுள்ளார். சபை இப்பணியைச்செய்து சீடர்களை ஏற்படுத்தி, அவர்களை சபையில் வளர்த்து எல்லா ஊழியங்களுக்கும் தயார் செய்யவேண்டுமென்பதே கிறிஸ்துவின் மேலான நோக்கம்.

ஆகவே, தனிநபர் சொந்த ஊழியங்களை நாம்தான் ஏற்படுத்திக் கொண்டுள்ளோமே தவிர அவற்றைத் திருமறையில் பார்க்க முடிவதில்லை. வேதம் சொல்வதை மட்டுமே செய்ய வேண்டும் என்று நினைப்பவர்கள் வேதத்தின்படியே சிந்திப்பர். ஆனால், வேதம் இது தவறு என்று எங்கும் சொல்லவில்லையே என்று கேட்கும் விதண்டாவாதப் போக்கே, வேதம் போதிக்காத இத்தகைய சொந்த ஊழியங்கள் இன்று பெருகியிருப்பதற்குக் காரணம். இப்பணிகள் திருச்சபையுடையது என்பதை எந்தவித சந்தேகமும் இல்லாது திருமறை தெரிவிக்கின்றது என்பதை நாம் ஏற்கனவே பார்த்தோம். கர்த்தரின் வார்த்தை காட்டும் வழியைவிட சிறந்த வழி இருக்க முடியாது. திருமறை சொல்வதை செய்யாமல், அது சொல்லாததை செய்து, இதைத்திருமறை தவறு என்று சொல்லவில்லையே என்று வாதிடும் அபத்தமான வழிகளை நாம் கைவிட வேண்டும். இவ்வாறு வாதம் செய்து சீரழிந்த மீகா (நியா. 17,18), யெரொபெயாம் (1 இராஜா. 12), ஆகாப் ஆகியோரைப்பற்றி திருமறை இன்றும் நமக்கு நினைவுறுத்திக் கொண்டுதான் இருக்கின்றது.

***சீர்திருத்தவாதப் பெரியோரில் ஒருவரும், வரலாறு கண்ட கல்விக்களஞ்சியமும், திருச்சபை ஈன்றெடுத்த தவப்புதல்வனுமான ஜோன் கல்வினைப்பற்றிய சுருக்கம்.***



# ஜோன் கல்வின்

ஜோன் கல்வின் 1509 ஆம் ஆண்டு ஜூலை மாதம் பிரான்ஸின் நொயோன் என்ற இடத்தில் பிறந்தார். கல்வினின் பெற்றோர் ரோமன் கத்தோலிக்கர். அவர்களுக்கு இரண்டாவது பிள்ளையாக கல்வின் பிறந்தார். தனது மகன் ஒரு காலத்தில் சபை ஊழியத்தில் ஈடுபட வேண்டுமென்பதற்காக கல்வினின் தந்தை உள்ளூர் பிசப்பிடம் ஆரம்பத்திலேயே அனுமதி பெற்றிருந்தார். அதன்படி கல்வின் பின்பு கத்தோலிக்கத் திருச்சபையில் கிளர்க் உத்தியோகத்தைப் பெற்றார். இவ்வாறு சபை ஊழியத்தில் கல்வின் ஈடுபட வேண்டுமென்பது தேவ வழிநடத்தலாக இருந்திருக்கிறது.

### சட்டப்படிப்பும், கர்த்தரை அறிதலும்

ஆரம்பத்தில் பாரிஸ் பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருந்த கல்வினை அவரது தந்தை சட்டப்படிப்பு படிக்க வேண்டுமென்பதற்காக ஓர்லியன்ஸுக்கு அனுப்பி வைத்தார். 1531 இல் கல்வினின் தந்தை இறந்தார். இதனால் பாரிஸுக்கு மீண்டும் வந்த கல்வின் பின்பு ஓர்லியன்ஸுக்குத் திரும்பவும் போய் தனது சட்டப்படிப்பை முடித்தார். இக்காலத்தில் ஜெர்மானிய சீர்திருத்தவாதிகளின் போதனைகளில் கல்வின் அதிக ஆர்வம் காட்டினார். அவரது இதயத்தில் அப்போதனைகள் பெரும் பாதிப்பை ஏற்படுத்தின. கல்வினுடைய ஆரம்பகாலக் கிறிஸ்தவ அனுபவத்தைப்பற்றி நமக்கு அதிகம் தெரியாது. ஏனெனில் அதைக்குறித்து கல்வின் அதிகம் எழுதவில்லை. தனது கிறிஸ்தவ அனுபவத்தைக் குறித்து ஓரிடத்தில் எழுதும் கல்வின், அது சடுதியாக தன்னில் கர்த்தர் ஏற்படுத்திய ஓர் அனுபவம் என்றும், கத்தோலிக்க மதத்தின் கண்முடித்தனமான வழிகளில் இருந்து தன்னை அது காப்பாற்றியது என்றும் குறிப்பிடுகிறார்.

கல்வின் இளமையிலேயே தனது வயதிற்கு மீறிய ஞானத்தைக் கொண்டிருந்தார். பெரும்பாலான நேரத்தை எப்போதும் நூல்களை வாசிப்பதிலேயே செலவிட்ட கல்வின், எடுத்த தீர்மானங்கள் எப்போதும் சரியாகவே இருந்தன. உணர்ச்சி வசப்பட்டு காரியங்களில் ஈடுபடாமல் கட்டுப்பாட்டுடன் இருப்பது கல்வினின் வழக்கமாக இருந்தது. தனது உணர்ச்சிகளை அல்லாது புத்தியையே நம்பி அவர் நடந்தார். சீர்திருத்தவாதிகள் அனைவரிலும் இவரைப்போல் நூல்களை வாசித்து, வேதத்தை ஜெபத்தோடு ஆழமாகப் படித்து, அனேக விலைமதிக்க முடியாத முத்துக்களான சத்தியங்களை வெளிக்கொணர்ந்து போதித்தவரில்லை.

கர்த்தரை அறிந்து கொண்டபின்பு கத்தோலிக்கரால் பாதிப்புக்குள்ளான கிறிஸ்தவர்களுக்கு பாரிஸில் துணை நின்றார் கல்வின். அவர்களை சந்தித்து ஆறுதல் கூறுவது அவரது வழக்கமாக இருந்தது. தனது நண்பரான நிக்கொலஸ் கொப்புடன் இணைந்து கத்தோலிக்க திருச்சபைக்கு எதிராக கல்வின் செயல்பட்டதால், அச்செய்தி அரசனான 1 ஆம் பிரான்ஸிஸின் காதுக்கு எட்ட, அவன் எதிராளிகளைத் தேடிப்பிடிக்க கட்டளையிட்டான். கோப் சுவிட்ஸர்லாந்தின் பேசெல் நகருக்கு தப்பிப் போக, பின்பு கல்வினும் அந்நகருக்கே போய்ச் சேர்ந்தார். இக்காலத்தில் ஹென்றி புலிங்கர், வில்லியம் பெரல் போன்றோரும் இங்கேயே இருந்தனர்.

### கல்வினின் பிரபல்யமான நூல்

இக்காலங்களில் இரு முக்கியமான காரியங்களில் கல்வின் ஈடுபட்டிருந்தார். முதலாவதாக வேதத்தை பிரெஞ்சு மொழியில் மொழிபெயர்க்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த பீட்டர் ரொபட் என்பவருக்கு கல்வின் துணை புரிந்தார். அதேநேரம், கிறிஸ்த

வத்தை துள்ளியமாக எடுத்துவிளக்கும் வகையில், கிறிஸ்தவத்தைப்பற்றிய விளக்கம் (Calvin's Institutes) என்ற பெயரில் ஒரு நூலையும் எழுதினார். பிரான்ஸின் அரசனுக்கு இந்நூலை அர்ப்பணித்த கல்வின் இந்நூலின் மூலம் சீர்திருத்தத்தை நாடும் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்துவது எவ்வளவு தவறானது என்பதை அரசன் உணர வேண்டுமென்று எதிர்பார்த்தார். இந்நூல் 1535 இல் பேசெல் நகரில் வெளியிடப்பட்டது. ஆரம்பத்தில் சிறுநூலாக இருந்த இந்நூல் பலதடவைகள் திருத்தப்பட்டு இறுதியில் ஒரு பெருநூலாக உருவெடுத்து வேதத்திற்கு அடுத்தபடியாக மிகவும் மதிக்கப்படும் இடத்தைப் பெற்றது. கிறிஸ்தவப் போதனைகளைக்குறித்து விளக்கமாக, இதைப்போல எழுதப்பட்ட அருமையான இன்னுமொரு நூல் இதுவரையும் வெளிவரவில்லை.

## ஜெனீவாவில் பெரலுடனான சந்திப்பு

பேசெலில் ஒரு வருடத்திற்கு மேலாக காலத்தைக் கழித்திருந்த கல்வின் ஸ்ட்ரெட்ஸ்பேர்க் என்ற நகரை அடைய முயற்சி செய்தார். முதலாம் பிரான்ஸிஸுக்கும், ஐந்தாம் சார்ள்ஸுக்குமிடையில் நடைபெற்றுக்கொண்டிருந்த போரினால் கல்வின் வழியில் ஜெனீவாவில் ஒரு நாளை செலவிட நேரிட்டது. அதேவேளை, கல்வினின் வருகை பற்றிய செய்தி பிரான்ஸின் சீர்த்திருத்த வாதியான வில்லியம் பெரலின் காதை எட்டியது. பெரலுடன் நடந்த சந்திப்பைக்குறித்து கல்வின் பின்வருமாறு விபரிக்கிறார்:

“சுவிஷேசப்பணியில் பேரார்வத்தைக்கொண்டிருந்த பெரல் என்னை ஜெனீவாவில் நிறுத்தப் பெரும் பிரயத்தனம் செய்தார். நான் சட்டப்படிப்பை மேலும் தொடரத் தீர்மானித்திருப்பதையும், என்னை நிறுத்தத் தான் எடுக்கும் முயற்சிகள் சரிவராததை உணர்ந்த பெரல் இறுதியாகக் கடும் வார்த்தைகளால், சீர்திருத்தப் போராட்டத்தில் தனக்குத் துணைபுரிய மறுத்து எனது படிப்பைத் தொடர்ந்தால் கடவுள் என்னை சபிப்பார் என்றார். அவ்வார்த்தைகளைக் கேட்டுப் பேரதிர்ச்சி அடைந்த நான் எனது பிரயாணத்தை நிறுத்திக் கொண்டேன். சுபாவத்தில் இயற்கையாகவே எந்தப்பதவியையும், பொறுப்பையும் முன்னேற்பதில் தயக்கம் காட்டும் நான் இப்பொறுப்பையும் ஏற்கத் தயங்கினேன்.”

இருபத்தியேழு வயது நிரம்பியிருந்த கல்வின் இவ்வாறே ஜெனீவாவில் தங்க நேரிட்டது. பெரலும் கல்வினும் வல்லமையுள்ள பிரசங்கிகளாக இருந்தனர். அநேகர் அவர்களுடைய பிரசங்களைக் கேட்கக் கூடினர். ஆனால், இருவருமே மக்கள் வெறுமனே பிரசங்கத்தைக் கேட்பவர்களாக மட்டும் இருப்பதை விரும்பவில்லை. அவர்கள் கேட்பதை வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் எதிர்பார்த்தனர். இதற்காக அவர்கள் இருவரும் மக்களுக்கு கடுமையான கட்டுப்பாட்டை விதித்தனர். சிலருக்கு இது பொறுக்கவில்லை. இக்கட்டுப்பாடுகளை எதிர்த்தவர்களை அவர்கள் “லிபடேரியன்” என்று அழைத்தனர். அதாவது, கிறிஸ்தவம் போதிக்கும் விதத்தில் நடப்பதில் அக்கறை காட்டாமல், தங்களுடைய சுதந்திரப் போக்கில் அதிக நாட்டமுள்ளவர்களாக இருந்தவர்கள் இவ்வாறாக அழைக்கப்பட்டனர். ஆனால், இறுதியில் இவர்கள் ஜெனீவாவின் கவுன்ஸில் அதிகாரத்தைக் கைப்பற்றியதால், பெரலும், கல்வினும் ஜெனீவாவைவிட்டு வெளியேற நேர்ந்தது. இதனால் சீர்திருத்தவாதமே ஒரு முடிவுக்கு வந்துவிடுமோ என்ற நிலையும் ஏற்பட்டது.

ஜெனீவாவிலிருந்து ஸ்ரெட்ஸ்பேர்கிற்கு வந்த கல்வின் அங்கிருந்த பிரெஞ்சு அகதிகள் சபை ஒன்றின் போதகராகப் பதவியேற்று, அதனைப் புதிய ஏற்பாட்டுப் போதனைகளுக்கு ஏற்ற முறையில் கொண்டு நடத்த பெரும் முயற்சி எடுத்தார். சபையில் பாடுவதற்காக சங்கீதப்புத்தகம் ஒன்றையும் அறிமுகப்படுத்தினார். இதனால் சீர்திருத்தவாத சபைகளிலெல்லாம் ஆராதனையில் சங்கீதம் பாடும் முறை பரவியது. அத்தோடு, கல்வின் வேதநூல்களுக்கு விளக்கவுரை எழுதியதோடு, அநேக கூட்டங்களில் சத்தியத்திற்காக வாதிட்டார். இக்காலத்தில் ஒரு விதவையைத் திருமணம் செய்து கொண்ட கல்வினுக்கு ஒரு மகன் பிறந்தான். ஆனால், அவன் அதிக நாட்கள் வாழவில்லை.

## மீண்டும் ஜெனீவாவில் சீர்திருத்த ஊழியம்

கல்வினுடைய நண்பர்கள் ஜெனீவாவின் கவுன்ஸில் அதிகாரத்தைக் கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்டு அதில் வெற்றியும் அடைந்தனர். கல்வின் மீண்டும் ஜெனீவாவிற்குத் திரும்பிவர வேண்டும் என்று அவர்கள் விடுத்த அழைப்பை ஏற்க கல்வின் ஆரம்பத்தில் மறுத்தார். இப்பெரும் பொறுப்பிற்குத் தான் தகுதியானவனா? என்ற தயக்கத்தில் ஆரம்பத்தில் அதனை ஏற்கத் தயங்கினார். இறுதியில் 1541 இல் ஜெனீவாவிற்கு மறுபடியும் திரும்பினார். மக்கள் கல்வினின் வருகையை ஆனந்தத்துடனும், பேரார்வத்துடனும் வரவேற்றனர். நகரின் ஆன்மீக, சமுதாய வாழ்க்கை முறை கர்த்தருடைய வார்த்தையின் பிரகாரம் நடக்க கல்வின் ஆவன செய்ய வேண்டும் என்று பலரும் எதிர்பார்த்தனர். வாரத்தில் ஐந்து முறை இங்கு கல்வின் பிரசங்கம் செய்தார். பின்பு இவ் வெண்ணிக்கை மேலும் அதிகரித்தது.

1546 இல் மார்டின் லூதர் மறைந்தார். கத்தோலிக்க திருச்சபையின் தவறுகளை நன்றாகப்புரிந்து கொண்ட மக்கள் லூதரின் மறைவிற்குப்பிறகு கல்வினின் தலைமையை நாடினர். பதினாறாம் நூற்றாண்டின் நடுப்பகுதியின் சீர்திருத்தவாத வளர்ச்சியில் கல்வின் உயர்ந்த இடத்தை வகித்தார். இக்காலத்தில், சீர்திருத்தவாதத்தின் வளர்ச்சிக்கும், ஐரோப்பாவில் ஜெனீவா நகர் வகித்த நிலைக்கும், அதன் ஆன்மீகத் தலைவரான கல்வின் பெருமளவிற்கு காரணமாக இருந்தார். ஐரோப்பாவின் ஏனைய பகுதிகளிலும், அதற்கு வெளியிலும் பாதிப்புக்குள்ளாகி அகதிகளாகமாறியவர்களுக்கு ஜெனீவா புகலிடம் தந்தது. இவ்வாறு வந்தவர்களில்

ஜோன் நொக்ஸ்ஆம் ஒருவர். இளைஞர்களும் சுவிஷேசப் பணிக்காகத் தம்மைத்தயார் செய்து கொள்ள ஜெனீவாவை நாடி வந்தனர். ஆங்கிலேய, ஸ்கொட்லாந்து அகதிகள் ஜெனீவாவில் தங்கியிருந்தபோதே வேதத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும் முயற்சியில் ஈடுபட்டனர். இதன் முதல் பதிப்பு 1560 இல் வெளியிடப் பட்டது. கல்வின் இதில் நேரடியாகப் பங்கு கொண்டிராத போதும் இதில் ஈடுபட்டவர் களுடன் அவருக்கு அதிக தொடர்பிருந்தது. இவ்வாங்கில மொழிபெயர்ப்பு ஜெனீவா பைபிள் என்று அழைக்கப்பட்டது.

## ஜெனீவாவில் சீர்திருத்தம்

ஐரோப்பாவில், ஜெனீவாவைப் போல வேறு எந்த நகருமே ஆன்மீகக் காரியங்களுக்காக ஒட்டு மொத்தமாக மாற்றி அமைக்கப்படவில்லை. இநகரின் திருச்சபைகள் மூலமாக அதன் அங்கத் தவர்களுடைய வாழ்க்கையில் ஒழுங்குமுறை கொண்டுவரப்பட்டு, அதன் மூலமாக முழு நகர மக்களுடைய வாழ்விலும் ஒழுங்கு முறையைக் கொண்டுவர முயற்சிப்பதே நகரின் முக்கிய நோக்கமாயிருந்தது. முழு நகர மக்களும் திரண்டு வந்து பிரசங்கத்தைக் கேட்பது நகரில் சாதாரண மாகக் காணக்கூடிய ஒரு நிகழ்ச்சியாக இருந்தது. ஞாயிறு தினத்தோடு வாரத்தின் ஏனைய மூன்று தினங்களில் நகரில் ஆராதனை நடந்தது. 13,000 மக்களைக் கொண்டிருந்த நகரில் வாரத்திற்கு பதினேழு பிரசங்கங்கள் அளிக்கப்பட்டன.

இளைஞர்களுக்கான கல்வி சிறப்பான முறையில் வழங்கப்பட்டது. சிறியோருக்கு வேதவினாவிடைப் போதனை அளிக்கப்பட்டது. பாடசாலைகளில் லத்தீன், கிரேக்க மொழிகளுடன், பதிய ஏற்பாட்டு கிரேக்கமும் போதிக்கப்பட்டது. அத்தோடு, கிறிஸ்தவக் கோட்பாடுகளும், ஆராதனையில் சங்கீதத்தைப்பாடி, பிரசங்கத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டிய முறைகளும் போதிக்கப் பட்டன. இதுதவிர, பல்கலைக்கழகப் படிப்பிலும் ஜெனீவா தலைசிறந்து விளங்கியது. வாரத்திற்கு அங்கு 27 விரிவுரைகள் கொடுக்கப்பட்டன. இத்தகைய போதனை முறைகளின் மூலம் நாற்றுக்கு மேற்பட்ட சிறந்த அறிவாளிகளை ஜெனீவா உலகிற்குத் தந்தது. ஜெனீவாவின் இத்தகைய வளர்ச்சிக்கும், சிறப்பிற்கும் கல்வின் பெருங்காரணமாக இருந்ததை யாரால் மறுக்க முடியும்.

## கல்வினின் சிறப்புக்கள்

கல்வின் உருவத்தில் மெலிந்தவராகவும், உடல் நலம் குன்றியவராகவும் காணப்பட்டார். உண வின்றி, உறக்கமின்றி ஜெபத்துடனும், உபவா சத்துடனும் வேதத்தைப் படிப்பதில் நாட்களை செலவிட்டதால் அவரது சரீரம் பாதிக்கப்பட்டது. இருந்தபோதும், எத்தனையோ பெரும் பொறுப்பு களை நிறைவேற்ற வேண்டியிருந்த கல்வின் அவற்றை நிறைவேற்றத் தவரவில்லை. பிரசங்கம் செய்யாத வேளைகளில், அவர் வேதநூல்களுக்கு விளக்கவுரை எழுதிக்கொண்டிருப்பார். இல்லாவிடில் கடிதங்கள் எழுதிக் கொண்டிருப் பார். கல்வின் கடிதங்கள் மூலம் பெரும்பாலா னோருக்கு ஆலோசனைகள் அளித்து வந்தார். திருமணமாகிய ஒன்பது வருடங்களுக்குப்பின் கல்வின் தனது துணைவியை இழந்தார். தனது இறுதி நாட்கள் வரையும் ஒரு மனைவி மட்டுமே அளிக்கக்கூடிய கவனிப்பை இழந்த நிலையில் கல்வின் வாழ்ந்தார்.


கல்வினின் வேத போதனைகளே அவரது சேவை களில் சிறப்பானதாக இருந்தது. வேத மாணாக்கர் கள் ஆயிரக்கணக்கில் கூடி அவரது போதனை களைக் கேட்டனர். இம்மாணவர்கள் தங்கள் நாடுகளுக்குத் திரும்பிப்போன பின்னர் அங்கே தாம் கல்வினிடம் பயின்ற போதனைகளின் மூலம் சீர்திருத்த வளர்ச்சிக்கு வித்திட்டனர். இவர்களில் அனேகர் சிறந்த பிரசங்கிகளாக ஊழியத்தில் சிறந்து விளங்கினர்.

கர்த்தரே சீர்திருத்தத்தைக் கொண்டுவரக்கூடியவர் என்பதை அவர் பயன்படுத்திய மனிதர்களின் மூலமாக அறிந்து கொள்ள முடிகின்றது. கிறிஸ் துவை அடித்தளமாகக்கொண்டு கர்த்தர் கட்டி எழுப்பும் திருச்சபைக்கு ஆபத்து ஏற்பட்ட வேளை யில் ஜோன் விக்ளிப், ஹஸ், செவனரோலா ஆகியோரை எழுப்பி அதனைச் சரி செய்யத் தொடங்கினார் நமது தேவன். அதன் பின்னர் மார்டின் லூதரை எழுப்பி அக்கட்டிடத்தைத் தரை மட்டமாக்கி, ஒரு புதிய கட்டிடத்தை வேதத்தை மட்டுமே அடித்தளமாகக் கொண்டு எழுப்பினார். கட்டிடத்தை முடிக்கும் பெரும்பணி ஜோன் கல்வினிடம் அளிக்கப்பட்டது. சிறந்த கல்விமானா கவும், சிந்தனைவாதியாகவும் இருந்த கல்வின் இதற்காக நேரத்தைச் செலவிட்டு கட்டுமானப் பணிக்கான திட்டங்களைக் கிரமமாக வகுத்து தனது பணியை மிகத்திறமையாகவும், சரியாகவும் நிறைவேற்றினார். ஆகவேதான், கல்வினின் அசாதாரணப் பணியின் பெரும் பயன்களைத் திருச்சபை இன்றும் தொடர்ந்து அனுபவிக்கின்றது.

சிலர், கல்வின் தேவனின் முன்குறித்தலைப்பற்றி மட்டுமே போதித்ததாக விபரம் புரியாமல் பேசு வார்கள். ஆனால், கல்வின் இல்லாமல் சபை சீர்திருத்தம் இல்லை; வேதமும் இன்று இல்லை என்ற உண்மையை வரலாறு வெளிப்படையாக தெரிவிக்கின்றது. கல்வினின் போதனைகளும், எழுத்துக்களும் வேதத்தை மட்டுமே அடிப்படை யாகக் கொண்டிருந்தன. வேதம் போதித்ததைக் கல்வின் விசுவாசித்தார்; போதித்தார். வேதத்தை விட்டு கல்வின் என்றுமே விலகியதில்லை. அப்போஸ்தலர்களுக்கு அடுத்தபடியாக உலகில் தோன்றிய கிறிஸ்தவ போதகர்களில் தலைசிறந்த வராக, அன்றுமட்டுமன்றி, இன்றும் கல்வின் கருதப்படுகிறார். 54 ஆம் வயதில், 1564 ஆம் ஆண்டு 27 ஆம் நாள் கல்வின் தேவனோடு இணைந்தார். இறுதிவரையும், உடல் நலம் மிகவும் பாதிக்கப் பட்ட நிலையிலும் கர்ததர் தனக்களித்திருந்த பணிகளை இவ்வரிய மனிதன் செய்யத் தவறிய தில்லை.

***ஜே. ஐ. பெக்கர் ஜோன் ஓவனின் நூலுக்கு வழங்கிய முன்னுரை***

# கிருபையின் கோட்பாடுகள்



*- ஓர் அறிமுகம் -*

## கிருபை

***மனிதனின் முழு இயலாமை, நிபந்தனை யற்ற தெரிவு, நிராகரிக்க முடியாத கிருபை, இறுதி வரையிலான விசுவாசிகளின் விடா முயற்சி ஆகிய நான்கு போதனைகளின் அடிப்படையில் கிறிஸ்துவின் பிராயச்சித்தத்தை விளக்கும்போதே சிலுவையின் முழு அர்த்தத்தையும் புரிந்து கொள்ள முடியும்.***

ஓவன் அடிகளாரின் இந்நூல் பொலியான விசுவாசத்திலிருந்தும், போதனைகளில் இருந்தும் நம்மை விடுவிக்கின்றது. ஓவனுடைய பேச்சைக்கேட்டு, அவரது போதனைகளை நாம் பின்பற்றினால், வேதாகமபூர்வமான சுவிஷேசத்தை எப்படிப் புரிந்து கொள்வதென்றும், எவ்வாறு பிரசங்கிப்பதென்றும் நாம் அறிந்து கொள்ளமுடியும். ஓவன், நம்மை சர்வ வல்லவரான இரட்சகருக்கு முன்பாக மண்டியிடச் செய்வார். அதுமட்டுமல்லாது, கிறிஸ்து எவருக்காக மரித்தாரோ, அவர்கள் மகிமையை அடைவார்கள் என்ற நிச்சயத்தை ஏற்படுத்திய, கிறிஸ்துவின் மீட்பு மரணத்திற்காக அவரைத் துதிக்கவும் நம்மை ஓவன் வழி நடத்துவார். டோர்ட் சமயக்குழுவினரின் போதனையின் விளக்கத்தைப் புரிந்து கொள்ளும் வரையில் நம்மால் கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் முழுப்பொருளையும் புரிந்து கொள்ள முடியாது என்று கூறுவது மிகைப்படுத்துவதாகாது. மனிதனின் முழு இயலாமை, நிபந்தனையற்ற தெரிவு, நிராகரிக்க முடியாத கிருபை, இறுதிவரையிலான விசுவாசிகளின் விடா முயற்சி ஆகிய நான்கு போதனைகளின் அடிப்படையில் கிறிஸ்துவின் பிராயச்சித்தத்தை விளக்கும்போதே சிலுவையின் முழு அர்த்தத்தையும் புரிந்து கொள்ள முடியும். தேவன், தனது இலவசமான, இரட்சிக்கும் அன்பை செலுத்திய, உதவியற்ற பாவிகளான, ஒரு குறிப்பிட்ட கூட்டத்தாரை மீட்கும்படியே கிறிஸ்து மரித்தார். எவருடைய பாவங்களுக்காக கிறிஸ்து மரித்தாரோ, அவர்களுடைய அழைப்பையும், நிகழ்காலத்திற்கும், எதிர்காலத்திற்குமான அவர்களது பாதுகாப்பையும் கிறிஸ்துவின் மரணம் உறுதிப்படுத்துகின்றது. கல்வாரி மரணம் இதனையே நிறைவேற்றியதோடு, தொடர்ந்து விளக்கவும் செய்கிறது. சிலுவை இரட்சித்தது மட்டுமல்லாமல், தொடர்ந்து இரட்சிக்கவும் செய்கிறது. வில்லியம் கவுப்பர் பின்வருமாறு பாடுகிறார்:

> இனியும் பாவம் செய்யாது இருக்கும்படி நீர் பரிகரித்த
> தேவ சபை அனைத்துமே மீட்படையும் நாள் வரையும்
> அன்பாய் மரிக்கும் ஆட்டுக்குட்டி விலையேறப்பட்ட நின் இரத்தம்
> வல்லமை ஒருபோதும் இழக்காதே!

இப்பழம்பெரும் சுவிஷேசத்தையே வெற்றிக்களிப்புடன் புதிய ஏற்பாடு பறை சாற்றுகின்றது. எந்தவித ஐயப்பாட்டிற்கும் இடமில்லாத வகையில் இதனையே ஓவன் அடிகளும் போதிக்கிறார்.

இரண்டாவதாக, ஓவனுடைய போதனைகளை நாம் கேட்டு நடப்போமானால், வேதபூர்வமான சுவிஷேசத்தைப் பிரசங்கிக்க அவர் நமக்குத் துணை செய்யக்கூடும். இவ்வாறு நான் கூறுவது சிலருக்கு முரண்பாடான ஒரு கூற்றாகத் தென்படலாம். ஏனெனில், கிறிஸ்து ஒவ்வொரு மனிதனையும் இரட்சிக்கவே மரித்தார் என்று பிரசங்கிக்க மறுப்பவர்கள், பிரசங்கிப்பதற்கான ஒரு சுவிஷேசமே இல்லை என்று இத்தகையோர் எண்ணிக்கொண்டிருக்கின்றனர். ஆனால் உண்மையில், ஓவனின் போதனைப்படி பிரசங்கிப்பவர்கள் புதிய ஏற்பாட்டின் தெளிவான சுவிஷேசத்தையே பிரசங்கிக்கிறார்கள்என்பதை இவர்கள் புரிந்து கொள்ளவில்லை.

## கிருபை

தேவனுடைய கிருபையின் சுவிஷேசத்தைப் பிரசங்கிப்பது என்றால் என்ன அர்த்தம்? இக்கேள்விக்கான பதிலை ஓவன் அடிகள் சந்தர்ப்பவசமாகவும், சுருக்கமாகவுமே தந்தாலும், அவரது விளக்கங்கள் சத்தியத்தைத் தெளிவுபடுத்து கின்றன. சபையாரைப் பார்த்து, அவர்கள் ஒவ்வொருவரிலும் கிறிஸ்து அன்பு வைத்திருக்கிறார் என்று கூறுவது உண்மையான சுவிஷேசப் பிரசங்கமல்ல, என்று ஓவன் கூறுகின்றார். அதுமட்டுமல்லாது, கிறிஸ்து அவர்கள் ஒவ்வொருவருக்காக வும் மரித்தார் என்று கூறுவதும் சுவிஷேசமல்ல என்கிறார் ஓவன். ஏனெனில், இவைகள் உண்மையாக இருக்குமானால், அவர்கள் அனைவரும் தவறாமல் இரட்சிக்கப்படுவார்கள் என்ற அர்த்தமாகின்றது. ஆனால், அது உண்மையல்ல.

ஒருவர், தான் தேவனின் நித்திய அன்புக்கும், கிறிஸ்துவின் மீட்கும் மரணத்திற்கும் பாத்திரதாரர் என்பதை கிறிஸ்துவை விசுவாசிப்பதற்கு முன்பு அறிந்து கொள்ள முடியாது. ஏனெனில், இவ்வறிவை ஒருவிசுவாசி கிறிஸ்தவ அனுபவமான நிச்சயத் துவத்தின் (Assuarence) மூலம் பெற்றுக் கொள்கிறார். இரட்சிக்கும் விசுவாசத்தை அடையுமுன் ஒருவர் இவ்வறிவைப் பெற்றுக் கொள்ள முடியாது. ஒருவர் கிறிஸ் துவை விசுவாசித்திருக்கிறார் என்ற உண்மையிலிருந்தே இது ஊகித்து அறியப்பட வேண்டுமே தவிர, ஒருவர் ஏன் கிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டும் என்பதற்கான காரணமாக இது கொடுக்கப்படவில்லை. எல்லோரும் விசுவாசித்து, நடக்கக் கடமைப்பட்டுள்ள, தேவனிடத்திலிருந்து வந்த, கீழ்வரும் நான்கு சத்தியங்களையும் போதிப்பதே உண்மையான வேதாகம பூர்வமான சுவிஷேசப் பிரசங்கமாகும்.

1. மனிதர்கள் அனைவரும் பாவிகளாக இருப்பதோடு, தம்மை இரட்சித்துக் கொள்ள முடியாத நிலையில் உள்ளார்கள்.

2. தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து பாவிகளை, அதிலும் ஈனமான பாவிகளையும், பூரணமாக இரட்சிக்கக் கூடியவராக இருக்கிறார்.

3. தாங்கள் பாவிகள் என்பதை உணர்ந்து, கிறிஸ்துவே இரட்சகர் என்று அவரில் விசுவாசம் வைத்து தேவ கருணையைப் பெற்றுக்கொள்பவர்கள், புறம்பே தள்ளப்பட மாட்டார்கள் என்று பிதாவும் குமாரனும் வாக்களித் ' திருக்கிறார்கள். அந்த வாக்குத்தத்தம் நிச்சயமானதும், உண்மையானது மாகும். அது கிறிஸ்துவின் பலியின் தகுதியுடமையின் மேல் உறுதியாக நிலைநாட்டப்பட்டது. அதுமட்டுமல்லாமல், அது யாருக்காகக் கொடுக்கப் பட்டதோ அவர்களுக்கு மட்டுமே உரித்தானதுமாகும்.

4. இரட்சிக்கப்படும்படித் தம்மை ஒப்புக்கொடுக்கும் ஒவ்வொரு ஆத்துமா வையும், கிறிஸ்து தனது இரக்கத்தின் விலையேறப்பட்ட தன்மை மற்றும் தனது பிராயச்சித்தத்தின் போதுமான தன்மை ஆகியவற்றின் மூலமாக இரட்சிக்கக் கூடியவராகவும், அதனைச் செய்ய விருப்பமுள்ளவராகவும் இருக்கிறார். தேவனிடத்தில் வருபவர்களை கிறிஸ்து மூலமாக விடுவிக்க வும், முற்றுமுழுதாக இரட்சிக்கவும், போதுமான இரட்சகராக கிறிஸ்து இருப்பதாக சுவிஷேசம் போதிக்கிறது. ஆகவே, சுவிஷேசத்தைக் கேட்கிற வர்கள் மனந்திரும்பி, தம்மை விசுவாசிக்க வேண்டும் என்று கிறிஸ்து எதிர்பார்க்கிறார். இதைச் செய்ய வேண்டியது ஒவ்வொருவரதும் கடமை யாக இருக்கின்றது.

***சபையாரைப் பார்த்து, அவர்கள் ஒவ்வொரு வரிலும் கிறிஸ்து அன்பு வைத்திருக் கிறார் என்று கூறுவது உண்மை யான சுவிஷேசப் பிரசங்கமல்ல, என்று ஓவன் கூறுகின்றார்.***

***ஒரு கிறிஸ்தவன் தனது வாழ்க்கையில் அன்றாடம் மனந்திரும்புதலைத் தவிர்க்கும்போது அவனுடைய ஆன்மீக வாழ்க்கையின் வளர்ச்சி குன்றுகிறது. கர்த்தர் பாவத்தைப் பெரிதாக எடுத்துக் கொள்ளமாட்டார் என்ற எண்ணத்தில், பாவ அறிக்கை என்ற பெயரில் ஒரு சில வார்த்தைகளை மட்டும் அவருக்குமுன் அவசரமாக உதிர்ப்பது உண்மையான மனந்திரும்புதலாகாது.***

*– மொரிஸ் ரொபட்ஸ் –*

## 1689 விசுவாச அறிக்கை

# பரிசுத்த வேதாகமம்

நமது விசுவாச அறிக்கையின் முதல் அதிகாரம் பரிசுத்த வேதாகமத்தைப் பற்றியது. பரிசுத்த வேதாகமம் என்றால் என்ன? என்று பத்து பாராக்களில் தெளிவான விளக்கத்தை நமது சீர்திருத்தவாதப் பெரியோர்கள் அளித்துள்ளார்கள். இப்பத்துப் பாராக்களையும் அவற்றிற்கான விளக்கத்தையும் இனிப்பார்ப்போம்.

*பாரா 1. இரட்சிப்புக்கின்றியமையாத சகலவிதமான அறிவையும், விசுவாசத்தையும், கீழ்ப்படிவையும் அளிக்கக்கூடிய, தவறிழைக்காத நியதியாகவும் (கட்டளைவிதி), உறுதியானதாகவும், போதுமான தாகவும், பரிசுத்த வேதாகமம் மட்டுமே அமைந் துள்ளது. இயற்கையும், படைப்பின் கிரியைகளும் (பொது வெளிப்பாடு), மனிதன் எந்தவித சாக்குப்போக்கும் சொல்ல இடமளியாதபடி, தேவனுடைய ஞானம், வல்லமை, நற்குணம் ஆகியவற்றைத் தெளிவாக வெளிப்படுத்தினாலும், இரட்சிப்புக்கு இன்றியமையாத கடவுளைப்பற்றிய அறிவையும், அவரது சித்தத்தையும் வெளிப்படுத்த வல்லமையற்றவை. ஆகவே, தேவன் தமது திருச்சபைக்கு வெவ்வேறு காலங்களில் பல்வேறு விதத்தில் தம்மையும், தமது சித்தத்தையும் வெளிப் படுத்தினார். அதுமட்டுமல்லாது, சத்தியத்தின் பாதுகாப்பிற்காகவும், பரப்புதலுக்காகவும், தீய மனிதர்கள், பிசாசு, உலகம் ஆகியவற்றின் தொல்லைகளின் மூலம் திருச்சபை பாதிப்புறாதபடி நிலைநிறுத்தப்பட்டு ஆறுதல் பெறவும், தம் சித்தத்தைக்குறித்தும், தம்மைக்குறித்துமான வெளிப்பாட்டை எழுத்துவடிவில் அருளத் திருவுளங்கொண்டார்.*

**விளக்கவுரை:**

**அ. கர்த்தரின் வெளிப்படுத்தல் - பாரா 1**

1. **பொதுவான வெளிப்படுத்தல்**
2. **சிறப்பான வெளிப்படுத்தல்**

   **அ. கிரியைகளாலும், வார்த்தையாலும் கொடுக்கப்பட்ட வெளிப்படுத்தல் (இரட்சிக்கும் வல்லமையற்றது)**
   **ஆ. எழுத்துருவில் கொடுக்கப்பட்ட வெளிப்படுத்தல் (மிக அவசியமானது)**

விசுவாச அறிக்கையின் முதலாவது பாரா கர்த்தரின் வெளிப்படுத்தலைப் பற்றிய கோட்பாட்டின் சுருக்கமான விளக்கத்தைத் தருகின்றது. இக்கோட்பாடு மெய்யான, ஜீவனுள்ள, ஒரே தேவன் தன்னைத்தானே எவ்வாறு வெளிப்படுத்தினார் என்ற விளக்கத்தை அளிக்கின்றது. இத்தேவனை நாம் அறிந்து கொள்ள முடியுமா? தம்மை அறியத்தர அவர் சித்தங் கொண்டுள்ளாரா? தமது திட்டங்களையும், நோக்கங்களையும் மனிதர் அறிந்து கொள்ளும்படி அவற்றை அவர் அறிவிப்பாரா? இவ்வினாக்களுக்கெல்லாம் பதிலளிக்கும் வேதம் கர்த்தர் தம்மை அறியத்தந்துள்ளார் என்று அழுத்தத்துடன் கூறுகிறது. கர்த்தர் தாமே தம்மை வெளிப்படுத்துகிறவர் என்பதோடு அவரை நாம் அறிந்து கொள்ளவும் முடியும் என்பதற்கு முழுமையான பரிசுத்த வேதாகமமே தெளிவான சாட்சியாக உள்ளது. இதனையே நாம் வெளிப்படுத்தலைப்பற்றிய கோட்பாடு என்கிறோம்.

இக்கோட்பாட்டினை பொதுவான வெளிப்படுத்தல், சிறப்பான வெளிப்படுத்தல் என்ற இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். கர்த்தர் தம்மைத் தாமே வெளிப்படுத்தும் அற்புதமான இருவழிமுறைகளாக இவை இரண்டும் இருந்தபோதும், தமது தன்மை, உள்ளடக்கம் ஆகியவற்றைப் பொறுத்தவரையில் இரண்டும் அடிப்படையில் மிகவும் வேறுபாடானவை. பொதுவான வெளிப்படுத்தலால் இரட்சிப்பிற்கு அவசியமான ஞானத்தை அளிக்க முடியாது. ஆனால், இரட்சிப்பிற்கும், விசுவாசத்திற்கும், கீழ்ப்படிவிற்கும் அவசியமான சகலதும், போதுமானதுமான ஞானத்தை சிறப்பான வெளிப்பாடே அளிக்கிறது. நமது விசுவாச அறிக்கையை வழிகாட்டியாகக் கொண்டு இவ்விரு வெளிப்பாடு களையும்பற்றி நாம் சிறிது விபரமாகப் பார்ப்போம்.

பொதுவான வெளிப்பாடு கர்த்தர் இருக்கின்றார் என்பதையும், அவரைப்பற்றிய குணாதிசயங்களையும் எடுத்துக் கூறுகிறது. இப்போதனைக்கான ஆதாரத்தை நாம் சங்கீதம் 19:1-3; ரோமர் 1:19-21 ஆகிய வேதப் பகுதிகளில் பார்க்கலாம். இவ்விரு வேதப் பகுதிகளும் கர்த்தர் தம்மைக்குறித்து இவ்வுலகத்தின் மூலம் பொதுவான முறையில் வெளிப்படுத்தியுள்ளார் என்று தெரிவிக்கிறது. நமது விசுவாச அறிக்கை, இயற்கையின் மூலமும், கடவுளின் படைப்பு, பராமரிப்பு ஆகிய கிரியைகளின் மூலமும் அவரது வல்லமையையும், ஞானத்தையும் பற்றி அறிந்து கொள்ள முடிவதால் மனிதன் எந்தவித சாக்குப்போக்கும் சொல்ல முடியாது என்று அறிவிக்கிறது.

இதை நாம் இலகுவாகப் புரிந்துகொள்ள முடியும். ஏனெனில், இவ்வுலகும், வானமும் மனிதனின் அநேக தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன. எதையும்

பயிரிட்டுப்பயன்பெற நமக்கு நிலத்தின் துணையும், மழை, காற்று, ஒளி, வெப்பம் ஆகியவற்றிற்கு வானத்தின் துணையும் தேவைப்படுகின்றது. இத்தகைய நன்மைகளை அளிக்கும் வானமும் பூமியும், ஞானமும், நன்மையும் கொண்ட ஒருவர் இருப்பதை நமக்குத் தெரிவிக்கின்றன. இயற்கையின் வல்லமை அதனை உருவாக்கிய வல்லமையுள்ள ஒருவர் இருக்கிறார் என்பதை தெளிவாகத் தெரிவிக்கின்றது. மனிதனுக்கு எது தேவையோ அதை இயற்கை அளிக்கின்றது! ஆனால், மனிதன் இதைப்புரிந்து கொள்ள மறுக்கிறான்.

விசுவாச அறிக்கை சங்கீதம் 19 தின் இரண்டாம் பகுதி போதிக்கும் சத்தியத்தை உறுதிப்படுத்துகின்றது. அதாவது, இயற்கையின் மூலம் வெளிப்படுத்தப்படும் கடவுளைப்பற்றிய உண்மைகள் நமது அகக்கண்களைத் திறக்கவோ, நம்மைப் பாவத்தில் இருந்து விடுவிக்கவோ, நமக்கு ஞானத்தை அளிக்கவோ வல்லமையற்றவை (19:7-13) என்பதே அவ்வுண்மையாகும்.

விசுவாச அறிக்கையின் இம்முதல் பாரா, எபிரேயர் 1:1 இன் அடிப்படையில், பொதுவான வெளிப்படுத்தலால் இயலாததை எவ்வாறு சிறப்பான வெளிப்படுத்தல் நிறைவேற்றுகின்றது என்பதை விளக்குகின்றது. கடவுள் தம்மை எவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார் என்பதை எடுத்துக்காட்டும் எபிரேயர் 1:1 மிக முக்கியமான வேதப் பகுதியாகும். பழைய உடன்படிக்கையின் (பழைய ஏற்பாடு) மூலம் கடவுள் தம்மை எவ்வாறு பங்கு பங்காக வெளிப்படுத்தியுள்ளார் என்பதை இவ்வேதப்பகுதி விளக்குகிறது. கடவுள் நமது முன்னோர்களுக்கு தம்மை கனவுகள் மூலமும், தரிசனங்கள் மூலமும், தேவ தூதர்கள் மூலமும், மேலும் பலவழிகளிலும் வெளிப் படுத்தியுள்ளார். இவற்றில் எதுவுமே ஆரம்பத்தில் எழுத்து வடிவில் கொடுக்கப்படவில்லை. ஏபிரேயர் 1:1 குறிப்பாக இயேசு கிறிஸ்துவைப்பற்றிப் பேசுகிறது. அதாவது, ஆரம்பத்தில் கடவுள் தம்மை வெளிப்படுத்திய விதங்களுக்கு மாறாக இறுதியில் தனது ஒரே குமாரனின் மூலமாகப் பேசினார். இதனை நாம் “கிரியைகளினாலும், பேச்சின் மூலமாகவும் கொடுக் கப்பட்ட வெளிப்பாடு” என்று கூறுகிறோம். அதாவது, கடவுள் கிரியைகள் செய்ததோடு அவற்றின் பொருளை நாம் புரிந்து கொள்ளும்படியாகத் தெளிவாகப் பேசியும் விளக்கியுள்ளார்.

இத்தகைய வெளிப்படுத்தலை, அதை நேரடியாகக் கேட்டவர்களாலும், இதைக்குறித்து பிறர் மூலம் தெரிந்து கொண்டவர்களாலுமே அறிய முடிந்தது. எழுத்தில் இருந்தால் மட்டுமே இதை இனி வரப்போகும் சந்ததியினரால் அறிந்து கொள்ள முடியும். ஆனால், வேதமோ எழுத்தில் கொடுக்கப்பட்ட வெளிப்படுத்த லாகும். கிரியைகளாலும், பேச்சின் மூலமும் கொடுக்கப்பட்ட வெளிப்படுத்தல் இப்போது எழுத்தில் தரப்பட்டு பாதுகாக்கப்படுகிறது.

கடவுள் ஏன் இரட்சிப்பிற்கு தனது கிரியைகளையும், பேச்சினால் அளிக்கப்பட்ட வெளிப்படுத்தலையும் எழுத்தில் வடித்துத்தர நோக்கங் கொண்டார் என்பதற்கான காரணங்களை விசுவாச அறிக்கை விளக்குகின்றது. இதற்கான மூன்று காரணங்களைப் பார்ப்போம்.

1. தனது சித்தத்தை திருச்சபைக்கு அறிவிக்கு முகமாக கடவுள் அதனை எழுத்தில் வடிக்க நோக்கங் கொண்டார். எழுத்தில் வடிக்கப்படாவிட்டால் திருச்சபை அதனை எவ்வாறு அறிந்து கொள்ள முடியும்?

2. சத்தியத்தைத் தொடர்ந்து பரப்பவும், பராமரிக்கவும் ஏதுவாக கடவுள் அதனை எழுத்தில் வடித்தார். இல்லா விட்டால் திருச்சபை அதனை எவ்வாறு ஏனையோருக்கு அறிவிக்க முடியும்?

3. பிசாசின் தந்திரங்களில் இருந்தும், உலகத்தினதும், நமதும் மாம்சபிரகாரமான நடவடிக்கைகளில் இருந்து திருச்சபையைப் பாதுகாத்துக் கட்டி எழுப்புமுகமாக வெளிப்படுத்தலை எழுத்தில் தந்தார். வேதமில்லாமல் விசுவாசிகள் தங்களுடைய ஆன்மீகப் போராட்டத்தில் வெற்றி பெறமுடியாது.

பொதுவான வெளிப்படுத்தலின் மூலம் இரட்சிப்பை அடைய முடியாததாலும், கிரியைகளினாலும், பேச்சின் மூலமும் கடவுள் தந்துள்ள வெளிப்படுத்தல் இரட்சிப் பிற்கு அத்தியாவசியமானதாலும் நமக்கு எழுத்தில் வடிக்கப்பட்ட வேதம் நிச்சயம் தேவைப்படுகிறது. கடந்த காலங்களில் கர்த்தர் தம்மை வெளிப்படுத்திய விதங்களின் மூலம் தொடர்ந்து தம்மை வெளிப் படுத்துவதை நிறுத்திக் கொண்டதால் (எபிரேயர்1:1), இன்று வேதம் அத்தியாவசியமானது. வேதமில்லாமல் ஒரு மனிதன் இரட்சிப்பை அடைய முடியாது. வேதமில் லாமல் ஒரு கிறிஸ்தவன் தனது கிறிஸ்தவ வாழ்வில் வளர்சிபெற முடியாது. அத்தோடு, திருச்சபையும் வெற்றிகரமாக முன்னேற முடியாது.

இவ்வத்தியாயத்தின் முதலாவது பாராவின் முதல் வசனம், இப்பாராவின் போதனைகளின் சாராம்சமாக அமைந்துள்ளது. “இரட்சிப்புக்கின்றியமையாத சகலவிதமான அறிவையும், விசுவாசத்தையும், கீழ்ப்படிவையும் அளிக்கக்கூடிய தவறிழைக்காத நியதியாகவும், உறுதியானதும், போதுமானதாகவும் பரிசுத்த வேதாகமம் மட்டுமே அமைந்துள்ளது.” இதனை மேலும் விளக்கமாகக் கூறுவதானால், வேதம் இரட்சிப்பிற்கு அவசியமான அறிவை எந்தவித சந்தேகமுமின்றி, எந்தவிதக்குறைபாடுமின்றி, உறுதியாகவும், போதுமானவிதத்திலும் தருகின்றது. கடவுள் மனிதனுக்கு தன்னைத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார். அவர் எதையும் விட்டு வைக்கவில்லை. ஆகவே, நமக்காகக் கொடுக்கப் பட்டிருக்கும் வேதத்தை நமது வாழ்க்கையில் உறுதியாகப்பின்பற்றி நடப்பதே நமது கடமையாகிறது (எபேசி. 5:15).

இம்முதலாவது பாராவின் போதனைக்கு அடிப்படையாக விசுவாச அறிக்கை கீழ்வரும் வேதப்பகுதிகளை சுட்டிக்காட்டுகின்றது.

ப.ஏ - சங்கீதம் 19; ஏசாயா 8:20; நீதி. 22:19-21
பு.ஏ - ரோமர் 1:19-21; எபிரே. 1:1; 2 தீமோத். 3:15-17;
2 பேதுரு 1:19-21; எபேசி. 2:20;

ரோமர் 15:4; 2:14, 15; லூக்கா 16:29.

வேதத்தைப்பற்றிய கோட்பாடுகளைப் போதிக்கும் அடிப்படை வேதப்பகுதிகளாக 2 தீமோ. 3, 2 பேதுரு 1 ஆகிய பகுதிகள் அமைகின்றன. இவற்றை நாம் கவன மாகப் படித்தல் அவசியம். 2 தீமோ. 3:16, “தேவவாக்கி யங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக் கின்றது” (God breathed) என்று போதிக்கின்றது. வேதத்தைக் கர்த்தர் எவ்வாறு தந்தருளினார் என்பதை இப்பகுதி தெரிவிக்கின்றது. இதை நாம் சரிவரப்புரிந்து கொள்ள வேண்டும். அதாவது, கர்த்தர் பேசி வேதத்தைத் தந்தருளினார் என்பதே இதற்குப் பொருள். இதைக்குறித்து மேலும் விளக்கமாக 2 பேதுரு 1:21, கர்த்தர் எவ்வாறு பேசி, மனிதரைப்பயன்படுத்தி வேதத்தை எழுத்தில் தந்தார் என்று தெரிவிக்கின்றது. இப்பகுதி, “தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டு பேசினார்கள்” என்று கூறுகின்றது. அதாவது இம்மனிதர்கள் தேவனாலே வழிநடத்தப்பட்டு, அவர் எதைப்பேசும்படியும், எழுதும் படியும் விரும்பினாரோ அவற்றை மட்டுமே எழுதினார் கள். இவற்றை அவர்கள் பேசி, எழுதியபோது தங்களுடைய தனித்துவம், பேச்சுவன்மை, எழுத்து நடை ஆகியவற்றை இழந்து விடவில்லை. பரிசுத்த ஆவியின் மூலமாக இவர்களைக் கொண்டு நடத்திய தேவன் தனது வார்த்தைகளை இம்மனிதர்களைப்பயன்படுத்தி எழுத்தில் தந்தருளினார். இதனை வேதம் உறுதியாகத் தெரிவிப்பதால் வேதத்தில் எந்தவிதமான தவறோ, தனிமனிதனின் பாவகரமான சொந்த எண்ணங்களோ காணப்படவில்லை. சில லிபரல் சிந்தனையாளர்கள் நினைப்பதுபோல் வேதத்தில் மனிதனின் சிந்தனையும், தேவனின் சித்தமும் கலந்து காணப்படவில்லை. முழு வேதமும் தேவனுடைய சித்தத்தை மட்டுமே அறிவிக் கின்றது. ஆகவே, முழு வேதமும் கர்த்தருடைய பரிபூரணமான, அதிகாரமுள்ள, அழியாத வார்த்தைகள்.

இதை வாசிக்கும் நண்பர்களே! கர்த்தர் தன்னை வெளிப்படுத்த செய்துள்ள அற்புதங்களை எண்ணிப் பாருங்கள். அவரை அறிந்து கொள்ள நீங்கள் உங்களுடைய ஆவியையும், இருதயத்தையும், சிந்தனை யையும் முழுதாகப் பயன்படுத்துவீர்களா? இரட்சிப்பிற் குரிய அனைத்து அறிவையும் அளிக்க வேதம் மட்டுமே போதுமானதும், அழியாததும், தவறிழைக்காததுமான சத்திய வார்த்தைகளாக இருப்பதால், அவ்வேதத்தை ஊன்றிப்படிக்க உங்கள் வாழ் நாளை முழுமையாக கர்த்தருக்கு ஒப்படைப்பீர்களா? பேதுரு, 2 பேதுரு 1:17-19 இல் கூறுவதுபோல் எழுத்தில் தரப்பட்டுள்ள வெளிப்படுத்தலே பேசப்படும் வார்த்தையைவிட மேலான வார்த்தை என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும். எழுத்தில் தரப்பட்டுள்ள வெளிப்படுத்தலே அழியாததும், உறுதியானதுமாகும். இன்று அநேகர் புத்தியற்று எழுத்தில் தரப்பட்டுள்ள வெளிப்படுத்தலைப் படித்து கர்த்தரை அறிந்து கொள்ள முயலாமல், அவர் தம்மோடு பேச வேண்டும் என்று அலைகிறார்கள். இவர்களைப்போல் நீங்களும் வேதத்தை விட வேறெதை யும் நாடி நிற்கிறீர்களா? சங்கீதக்காரன் வேதத்தைக் குறித்து சொல்வதை எண்ணிப் பாருங்கள்: “அவைகள் பொன்னிலும், மிகுந்த பசும் பொன்னிலும் விரும்பப்படத் தக்கதும், தேனிலும், தேன்கூட்டிலிருந்து ஒழுகும் தெளி தேனிலும் மதுரமுள்ளதுமாய் இருக்கின்றது.”

பாரா 2: *பரிசுத்த வேதாகமம் அல்லது எழுத்து வடிவில் அமைந்த தேவனுடைய வார்த்தை, கீழ்வரும் பழைய, புதிய ஏற்பாடுகளை மட்டுமே கொண்டது.*

*பழைய ஏற்பாடு:*

*ஆதியாகமம், யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம், உபாகமம், யோசுவா, நியாயாதிபதிகள், ரூத், 1 சாமுவேல், 2 சாமுவேல், 1 இராஜாக்கள், 2 இராஜாக்கள், 1 நாளாகமம், 2 நாளாகமம், எஸ்றா, நெகேமியா, எஸ்தர், யோபு, சங்கீதம், நீதிமொழிகள், பிரசங்கி, உன்னதப்பாட்டு, ஏசாயா, எரேமியா, புலம்பல், எசேக்கியல், தானியல், ஓசியா, யோவேல், ஆமோஸ், ஒபதியா, யோனா, மீகா, நாகூம், ஆபகூக், செப்பனியா, ஆகாய், சகரியா, மல்கியா.*

*புதிய ஏற்பாடு:*

*மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான், அப்போஸ்தலர், ரோமர், 1 கொரிந்தியர், 2 கொரிந்தியர், கலாத்தியர், எபேசியர், பிலிப்பியர், கொலேசியர், 1 தெசலோனிக்கேயர், 2 தெசலோனிக்கேயர், 1 தீமோத்தேயு, 2 தீமோத்தேயு, தீத்து, பிலேமோன், எபிரேயர், யாக்கோபு, 1 பேதுரு, 2 பேதுரு, 1 யோவான், 2 யோவான், 3 யோவான், யூதா, யோவானுக்கு வெளிப்படுத்தின் சுவிஷேசம்.*

*மேல்வரும் புத்தகங்கள் அனைத்தும் தேவனுடைய ஏவுதலினால், எமது விசுவாசத்திற்கும் வாழ்க்கைக்கும் நியதிப்பிரமாணமாக இருக்கும்படியாக அளிக்கப் பட்டுள்ளன.*

பாரா 3: *தள்ளுபடி புத்தகங்கள்* (Apocrypha) *என அழைக்கப்படுபவை தெய்வீக ஏவுதலால் அருளப்படாதவையால் திருமறையில் அவற்றிற்கு இடமில்லை. ஆகையால், அவை ஏனைய சாதாரண புத்தகங்களைப்போல் பயன்படுத்தப்பட வேண்டுமே தவிர திருச்சபையில் அவற்றிற்கு எந்தவிதமான அதிகாரமுமில்லை.*

**விளக்கவுரை:**

**ஆ. வேதத்தின் ஒழுங்கமைப்பு - பாரா 2 & 3**

1. **ஒழுங்குபடுத்தப்பட்ட புத்தகங்கள்**
   **பழைய ஏற்பாடு - 39 நூல்கள்**
   **புதிய ஏற்பாடு - 27 நூல்கள்**
2. **தள்ளுபடிப் புத்தகங்கள்**
3. **வேத நூல்களின் ஒழுங்கமைப்பின் நிரூபணம்**
   **(வேதம் தேவனால் அருளப்பட்டது)**
4. **வேத நூல்களின் ஒழுங்கமைப்பு தரும் போதனை**
   **(வேதமே நமது விசுவாசத்திற்கும், வாழ்க்கைக்குமான கர்த்தரின் கட்டளை நியதி)**

இப்பகுதி, எவ்வாறு? எத்தனை? நூல்களைக் கர்த்தர்

தன்னால் தெரிவு செய்யப்பட்ட மனிதர்கள் மூலமாக, வேதமாக ஒருங்கினைத்துத் தந்துள்ளார் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறது. உண்மையானதை நாம் தெரிந்தெடுத்து, தவறானவற்றை விலக்கி வைக்க வேண்டும். வெளிப்படுத்தலாகிய கோட்பாடு, மனிதர் கீழ்ப்படிந்து நடக்குமாறு கர்த்தர் எவ்வாறு தனது சித்தத்தை அறியத்தந்தார் என்று விளக்குவதையே நோக்கமாகக் கொண்டிருப்பதால், கர்த்தர் தனது சித்தத்தை எந்நூல்களின் மூலமாகத் தெரியப்படுத்தினார்? என்ற வினாவிற்கு நாம் பதிலளிக்க வேண்டும்.

இப்பாராக்கள், ரோமன் கத்தோலிக்க திருச்சபையின் தவறுகளைச் சுட்டிக்காட்டுகின்றன. ரோமன் கத்தோ லிக்க திருச்சபை, வேதத்திற்கு முரணாக தள்ளுபடிப் புத்தகங்களை வேதத்தோடு இணைத்து, அவற்றை வேதத்தின் ஒரு பகுதியாகக் கருதுகின்றன. ஆனால், தள்ளுபடி நூல்கள் வேதத்தின் ஒரு பகுதியல்ல என்பதையும், அவை கர்த்தரால் அருளப்பட்டவையல்ல, என்பதையும் (2 தீமோ. 3:16) மிகத் தெளிவாக எம்மால் சுட்டிக்காட்ட முடியும். தள்ளுபடி நூல்களால் மனிதர் களுக்கு இரட்சிப்பையோ, விசுவாசத்தையோ அளிக்க முடியாது. அவை முற்றாக நிராகரிக்கப்பட வேண்டியவை.

யூதர்கள் தள்ளுபடி நூல்களை எப்போதும் வேதத்துடன் சேர்க்கப்படக் கூடாதென்று நிராகரித்துள்ளனர். சப்டுவாஜின்ட் என்று அழைக்கப்படும் கிரேக்க மொழி பெயர்ப்பில் அமைந்த பழைய ஏற்பாடு இவற்றை உள்ளடக்கி இருந்தது. கிரேக்க மொழியிலிருந்து இலத்தீன் மொழியில் வேதம் மொழிபெயர்க்கப்பட்ட போதே இத்தள்ளுபடிப் புத்தகங்கள் ஜெரோமின் இலத்தீன் வல்கேட் மொழிபெயர்ப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்டன. இவ்வாறே ரோமன் கத்தோலிக்கர் இவற்றை வேதத்துடன் சேர்த்துக்கொண்டனர். 397 இல் கூடிய காத்தேஜ் கவுன்ஸில், இத்தள்ளுபடிப் புத்தகங்கள் பொது ஆராதனைகளில் வாசிக்கத் தகுதியுள்ளவை என்று தீர்மானம் நிறைவேற்றியது. 1548 இல் கூடிய டிரென்ட் கவுன்ஸில் இத்தள்ளுபடிப் புத்தகங்கள் வேதத்துடன் இணைக்கப்படத் தகுதியற்றவை என்று தீர்மானித்தது. பதினாறாம் நூற்றாண்டு சீர்திருத்த வாதிகள் அனைவரும் தள்ளுபடிப்புத்தகங்கள் வேதத் திற்கு எதிரானவை என்றும், அவற்றை வேதத்தோடு சேர்க்கக்கூடாது என்றும் கருதினர். எமது 1689 விசுவாச அறிக்கையும், ஆதி யூதர்களுடனும், கிறிஸ்தவ ஆதிசபையுடனும், சீர்திருத்த வாதிகளுடனும் இணைந்து இத்தள்ளுபடிப் புத்தகங்களை முற்றாக நிராகரிக்கின்றது.

**பாடம்:** மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது, இவ்விரு பாராக்களும் கிறிஸ்தவர்களுடைய அன்றாட வாழ்க்கை அனுபவத்திற்கு எந்த சம்பந்தமுமில்லாதவை போலத் தென்படலாம். ஆனால், இவை கர்த்தர் எத்தனை அற்புதமாகத் தனது பராமரிப்பின் கிரியைகளால் வேதத் தைப் பாதுகாத்துத் தந்துள்ளார் என்பதை எடுத்துக் காட்டுகின்றன. இப்பராமரிப்பை நாம் பாரா 8 இல் மேலும் விளக்கமாகப் பார்க்கலாம்.

கர்த்தர் அனைத்தையும் நன்மையாகவே செய்துள்ளார். அவர் எல்லாவற்றையும் படைத்தபிறகு அவற்றைப்பார்த்து மிகவும் நல்லது என்றே கூறியுள்ளார். அதாவது எல்லாம் முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளன என்பது இதற்குப் பொருள். கிறிஸ்துவின் பரிகாரப்பலியான சிலுவை மரணமும் முடிந்ததாக, அதாவது முழுமையாக நிறை வேற்றப்பட்டதாக வாசிக்கிறோம். இதேவகையில், வேதமும் முழுமையாக நிறைவேற்றப்பட்ட நூலாகும். வேதத்தின் 66 நூல்களும் ஒரு நூலகமாகும். இவை நம்மைப் பரலோகத்திற்கு வழிகாட்டும் நூல்களாகும். இவ்வறுபத்தி ஆறு நூல்களில் ஒவ்வொன்றையும் நாம் அன்றாடம் வாசிக்க வேண்டும். வேதத்தை அன்றாடம் வாசிக்கும்படியாக, தகுந்த ஒரு முறையைப் பின்பற்றி ஒவ்வொரு நூலில் காணப்படும் போதனையையும் புரிந்து கொள்வது நமது ஆன்மீக வாழ்க்கைக்கு அத்தியாவசிய மானதாகும்.

## ஐரோப்பா, வட அமெரிக்கா, கனடா, மலேஷியா சிங்கப்பூர் மற்றும் மத்தியகிழக்கு நாடுகளில் வாழும் வாசகர்களுக்கு ஒரு வேண்டுகோள்

**1999 ஆம் ஆண்டு முதல் பத்திரிகைக்கு சந்தா அறிமுகப்படுத்தப்படுகிறது. தொடர்ந்தும் பத்திரிகையைப் பெற்றுக் கொள்ள விரும்புகிறவர்கள் கீழே தரப்படும் சந்தா விபரப்படி அடுத்த வருடத்திற்கான (1999) சந்தாவைத் தயவுடன் உடனடியாக அனுப்பி வைக்கவும்.**

ஒரு வருட சந்தா — **NZ $16.00** (தபால் செலவு உள்ளடங்கியது)
(வங்கிக் காசோலைகளை நியூசிலாந்து டாலரில் அனுப்பவும்)

அனுப்ப வேண்டிய முகவரி: Bible Lamp, P O Box 62 159, Sylvia Park Auckland, New Zealand.



# வில்லியம் கேரி

வில்லியம் கேரி

கர்த்தரிட மிருந்து பெருங் காரியங் களை எதிர் பாருங்கள்; கர்த்தருக் காகப் பெருஞ் சாதனை களைச் செய்யுங் கள்

**கிருஷ்ண பாலின் கிறிஸ்தவ அனுபவம்**

கிருஷ்ண பால் ஒரு இந்து பிராமணன். ஒரு முறை ஜோன் தோமஸ் அவரைப் பார்த்து பக்கத்தில் எங்காவது பிராமணப் பாடசாலை உண்டா? என்று கேட்டார். ஜோன் தோமஸ் ஒரு இந்தியப் பிராமணனைப்போல் உடைதரித் திருந்ததால் கிருஷ்ண பாலிற்கு அவரை அடையாளம் தெரியவில்லை. இவ்வாறாக கிருஷ்ண பாலிடம் பேச்சுக் கொடுத்த தோமஸ் கிறிஸ்துவின் பாடசாலையைப்பற்றியும், மீட்பின் மூலமாக எவ்வாறு இலகுவாக அப்பாடசாலையில் சேர்ந்துவிட முடியுமென்பதையும் கிருஷ்ண பாலிற்கு விளக்கிக்கூறத் தயங்கவில்லை. கிருஷ்ண பால் ஏற்கனவே மொரேவியர்கள் மூலமும், ஜோன் பவுன்டன் மூலமும் கிறிஸ்துவைக் குறித்துக் கேள்விப் பட்டிருந்தாலும் இத்தடவையே முதல் முறையாக சுவிஷேசம் அவருள் வல்லமையுடன் இறங்கியது.

பத்தொன்பது வயதில் கடுமையான நோயால் பாதிக்கப்பட்டிருந்த கிருஷ்ண பால், ராம் சரன் பால் கோஸ்பராவின் இந்து மதப்பிரிவில் ஒரு சீடனாக சேர்ந்தார். அவரிடம் அநேக மந்திரங்களையும் கற்றுக் கொண்டார். முப்பத்தி ஐந்து வயதில் தான் கற்ற மந்திரங்களை மற்றவர்களுக்கு கற்றுக் கொடுக்கும் ஆசிரியராக இருந்தார். ஆனால், மனச்சமாதானமில்லாமலும், பாவத்திலிருந்து விடுதலையற்றவராகவும் இருந்தார். இது, கிறிஸ்தவர்களின் போதனை என்ன தான் கூறுகின்றதென்று அறிந்து கொள்ளும் ஓர் ஆர்வத்தை அவருக்குள் எழுப்பியது.

ஒருமுறை, அவர் ஹுக்ளி நதியில் குளித்துக் கொண்டிருந்தபோது, கால் வழுக்கி விழுந்து தனது தோள்பட்டையை உடைத்துக் கொண்டார். தாங்க முடியாத வலியோடு வீட்டிற்கு விரைந்த கிருஷ்ண பால் மிஷனரி டாக்டருக்கு செய்தி அனுப்பினார். தோமஸ், கேரியுடனும், மார்ஸ்மனுடனும் அரை மைலுக்கு அப்பால் இருந்த கிருஷ்ண பாலின் வீட்டிற்கு விரைந்தார். கிருஷ்ண பாலைப் பார்த்தவுடன், அம்மனிதனுக்கு தான் ஏற்கனவே கிறிஸ்துவைப் பற்றிக் கூறியிருப் பது தோமஸுக்கு நினைவு வந்தது. கிருஷ்ண பாலின் தோளுக்கு சிகிச்சை அளித்தபின், அவருக்கு ஒரு வசனத்தைக் கொடுத்து, அதைப்பற்றி சிந்திக்கும் படியாக ஆலோசனை கூறினர். தனது குழந்தையை நேசிக்கும் தகப்பன் அவனைத் தண்டிக்கிறார் என்பதே அவ்வசனமாகும்.

அன்று மத்தியான வேளையில் கேரியும், மார்ஸ்மனும் மறுபடியும் கிருஷ்ண பாலைப் பார்க்க வந்தனர். அவர்கள், கிருஷ்ண பாலும், அவரைச் சுற்றி இருந்தவர்களும் அன்றாடம் தியானம் செய்வதற்காக பெங்காலி மொழியில் எழுதப்பட்ட ஒரு பாடலைக் கொடுத்தனர்.

> பாவத்தை அறிக்கையிட்டு, பாவத்தை விட்டுவிலகி
> கிறிஸ்துவின் நீதியைத் தழுவும்போது
> ஆவி சுதந்திரமடைகின்றது.

என்பதே அப்பாடல். கிருஷ்ண பால் தனது மந்திரங்களையெல்லாம்விட இப்பாடலை மிகவும் விரும்பித் தியானித்தார். அடுத்த நாள் காலை தோள் வலி

அதிகமானதால், கேரி கிருஷ்ண பாலை மிஷனுக்கு அழைத்துக் கொண்டு போனார். அன்று முதல், ஆன்மீகக் காரியங்களைப் பற்றி அறிந்து கொள்ள கிருஷ்ணா மிஷனுக்கு அடிக்கடி போக ஆரம்பித்தார். வார்ட்டும், பீலிக்ஸுºம் இரட்சிப்பின் வழியைப்பற்றி மேலும் விளக்கமாக கிருஷ்ணாவுக்கு எடுத்துக் கூறினர். தான் படித்துத் தெரிந்து கொண்டவற்றை கிருஷ்ணா தனது மனைவி ராசமாயிக்கும், தனது மனைவியின் சகோதரியான ஜெயமணிக்கும் போதித்தார். ஒரு மார்கழி தினத்தில் தோமஸ் கிருஷ்ணாவைப் பார்த்து, நீர் இதுவரை படித்தவற்றை எல்லாம் நன்றாகப்புரிந்து கொண்டிருக்கிறீரா? என்று கேட்டார். அதற்கு கிருஷ்ணா, இயேசு கிறிஸ்து பாவிகளின் இரட்சிப்பிற்காக தன்னையே பலியாகக் கொடுத்துள்ளார். இதனை நானும் எனது நண்பன் கோகுலும் எவ்வித சந்தேகமுமின்றி விசுவாசிக்கிறோம், என்று கூறினார். அப்படியானால் நீங்கள் இருவரும் எங்களுடைய சகோதரர்கள், என்று தோமஸ் கிருஷ்ணாவைப் பார்த்துக் கூறினார். மனம் திரும்பும் ஒவ்வொரு இந்துவும் தனது சாதிப்பாகுப்பாட்டை விட்டுவிட வேண்டும் என்பதில் உறுதியாய் இருந்த மிஷனரிகள், அவர்களைத் தங்களுடன் வந்து உணவருந்தும்படி வேண்டினர். முதலில் ஒரு தனி இடத்தில் ஜெபம் செய்தபின், மிஷனரி குடும்பங்கள் ஒன்று கூடி கிருஷ்ணாவுடனும், கோகுலுடனும் சேர்ந்து உணவருந்தினர். மாலையில் ராசமாயியும், ஜெயமணியும் அவர்களுடன் சேர்ந்து உணவருந்தியது அனைவருக்கும் பெரு மகிழ்ச்சியைத் தந்தது.

அவர்களுடைய சாட்சி எல்லோருக்கும் உற்சாகத்தை அளித்தது. திருமுழுக்கிற்கான நாளும் குறிக்கப்பட்டது. தோமஸ் ஆனந்தத்தால் இவ்வுலகையே மறந்தார். பதினைந்து வருடங்களாக இத்தருணத்திற்காக அவர் காத்திருந்தார். கேரியும் கூட தனது நம்பிக்கையெல்லாம் இழந்திருந்த வேளையில் இவ்வற்புதம் நிகழ்ந்தது. மிஷனரிகள் ஆனந்தக்கடலில் மூழ்கி இருந்த வேளையில், கிருஷ்ணாவின் வீட்டைச்சுற்றி ஆபத்து வலம் வந்தது. விடிந்தபோது ஒரு கூட்டம் கிருஷ்ணாவை ஊர் நீதிபதியின் முன் கொண்டு போய் நிறுத்தினர். கிருஷ்ணா உடனே கூண்டில் அடைக்கப்பட்டார். கேரியும், மார்ஸ்மனும் கவர்னரிடம் இதைக்கூற, கிருஷ்ணா கவர்னர் முன் கொண்டுவரப்பட்டார். கூடி நின்ற கூட்டம், இம்மனிதன் ஐரோப்பியர்களுடன் உணவருந்தி அவர்களுடன் சேர்ந்துவிட்டான், என்று கூக்குரலிட்டது. இல்லை, என்று உரத்துப் பேசிய கவர்னர், இம்மனிதன் கிறிஸ்தவனாக மாறிவிட்டான், இவனுக்கு ஒருவரும் ஒரு தொல்லையும் கொடுக்கக்கூடாது, என்று கட்டளையிட்டார்.

கூட்டம் கவர்னர் இருந்த இடத்தை விட்டுப் போனபோதும் தனது ஆத்திரத்தை இழக்கவில்லை. சிலர், ஏற்கனவே ஒரு இந்துவுக்கு மணமுடிக்க நிச்சயித்திருந்த கிருஷ்ணாவின் மூத்த மகளைக் பிடித்துக் கொண்டனர். நூற்றுக்கு மேற்பட்டோர் கிருஷ்ணாவைப் பார்த்து கேளி செய்து சபித்தனர். கேரி வீதியில் பயத்துடன் அழுதுகொண்டிருந்த ராசமாயியுடன் சேர்ந்து கண்ணீர் விட்டார். கிறிஸ்துவில் உனக்கிருக்கும் விசுவாசமே இத்தொல்லையைக் கொண்டு வந்துள்ளது. கிறிஸ்து உன் கண்ணீரைக் கழுவி ஆறுதலளிப்பார். உன்னை என்றுமே கைவிட மாட்டார், என்ற கேரியின் வார்த்தைகளை ராசமாயி என்றுமே மறக்கவில்லை. கிருஷ்ணாவின் குடும்பத்தை ஒரு கூட்டம் அழிக்கத் திட்டமிட்டிருக்கும் செய்தி கவர்னர் காதுக்கு எட்டியது. கவர்னர் அவர்களுக்குத்தகுந்த பாதுகாப்பு அளித்ததால் அனைவருமே தப்பினர்.

அதன்பின் உறவினர்களும், சுற்றத்தாரும் கிருஷ்ணாவின் குடும்பத்தாரைத் தாக்கினர். வரப்போகும் ஞாயிறு தினத்தில் அவர்கள் அனைவரும் திருமுழுக்கு எடுக்கவிருப்பதைத் தடை செய்யுமுகமாகவே இதைச் செய்தனர். கிருஷ்ணா மட்டுமே திருமுழுக்கு எடுக்க முன்வந்தார். ஏனையோர், சிறிது காலம் பொறுத்திருக்குமாறு வேண்டினர். கூட்டத்தாரின் ஏளனத்திற்கு மத்தியில் கிருஷ்ணா தைரியத்தோடும், முகமலர்ச்சியோடும் திருமுழுக்கிற்குத் தன்னை ஒப்புக் கொடுத்தார். கிருஷ்ணாவுடன் பீலிக்ஸுºக்கும் அன்றைய தினம் திருமுழுக்கு கொடுக்கப்பட்டது. அனைவரும் திருவிருந்திலும் கலந்து கொண்டனர். முதன் முதலாக அன்றைய தினம் பெங்காலி மொழியில் திருவிருந்து நடந்தது. செராம்பூர் குடும்பத்தின் மாலை ஆராதனையை அன்றைய தினம் பீலிக்ஸ் நடத்தியது அனைவருக்கும் மேலும் ஆனந்தத்தை அளித்தது.

**வில்லியம் கேரி**

***"இயேசு கிறிஸ்து பாவிகளின் இரட்சிப் பிற்காக தன்னையே பலியாகக் கொடுத் துள்ளார். இதனை நானும் எனது நண்பன் கோகுலும் எவ்வித சந்தேகமு மின்றி விசுவாசிக் கிறோம்"***

***- கிருஷ்ண பால் -***

**வில்லியம் கேரி**

***கிறிஸ்துவின் சுவிஷேசத்திற்கு சாதிப்பாகுபாடு ஒரு எதிரி என்பதை அறிந்திருந்த மிஷனரிகள் அதை அடியோடு வெறுத்தனர்.***

கிருஷ்ணாவே, செராம்பூர் ஊழியத்தின் மூலமாக முதலில் கர்த்தரை அறிந்து கொண்டவர். இரு வாரங்களுக்குப்பின் ஜெயமணிக்குத் திருமுழுக்கு அளிக்கப் பட்டது. ஜெயமணியின் வழிநடத்தலால் ராசமாயியும், அன்னாடா என்ற ஒரு விதவையும் விரைவிலேயே திருமுழுக்கைப் பெற்றுக்கொண்டனர். பெண்கள் இயற்கையாகவே இந்திய சமுதாயத்தில் எதிர் நோக்கும் பெருந் தொல்லைகளுக்கு மத்தியில் இம்மூன்று பெண்களும் கிருஷ்ணாவைப் பின்பற்றி கர்த்தரின் வழியில் நடக்கத் துணிந்தனர். கேரியின் பண்ணிரண்டு வயது மகன் வில்லியமும் திருமுழுக்கிற்குத் தயாராக இருந்தபோதும், அவன் கிறிஸ்துவில் மேலும் ஆழமான அனுபவத்தைப் பெறும்வரையில் அதைத் தள்ளிப்போட முடிவு செய்யப்பட்டது.

செராம்பூர் மிஷனரிகள் ஆரம்பத்திலிருந்தே சாதிப்பாகுபாட்டிற்கு திருச்சபையில் இடம் கொடுக்கக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தனர். கிறிஸ்துவின் சுவிஷேசத்திற்கு சாதிப்பாகுபாடு ஒரு எதிரி என்பதை அறிந்திருந்த மிஷனரிகள் அதை அடியோடு வெறுத்தனர். தென்னிந்திய மிஷனரிகளும், செப்லின்களும் சாதிப்பாகுபாட்டைத் தடை செய்தால், தங்கள் ஊழியம் பாதிக்கப்படும் என்பதற்காகவும், சாதிப்பாகுபாடு சமுதாயத்தில் மனிதனுக்குக் கொடுக்கப்படும், அவரவரது தகுதிக்கெற்ற ஒரு அந்தஸ்தே என்ற சாக்குப் போக்குடன் சபைகளில் சாதிப்பிரிவிற்கு இடம் கொடுத்திருந்ததையும் மிஷனரிகள் அறிந்திருந்தனர். இதற்கு, செராம்பூர் மிஷனரிகள் தலைவணங்கவில்லை. தங்களுடைய ஊழியத்தின் வேகம் இதனால் தடைப்படும் என்பதை அவர்கள் உணர்ந்திருந்தபோதும், அது இறுதியில் உறுதியானதாக அமையும் என்பதில் அவர்களுக்கு எந்த சந்தேகமும் இருக்கவில்லை. *(வளரும்)*


# சவரின் கிறேஸ் வெளியீடுகள்

| | |
|---|---|
| ***திருச்சபை சீர்திருத்தம்*** | ***$7.00*** |
| ***சுவிஷேசக் கோட்பாடும் புதிய சுவிஷேசக் கோட்பாடும்*** | ***$4.00*** |
| ***தீர்மானத்தின் மூலம் மறுபிறப்பு*** | ***$4.00*** |
| ***வேதாகமத்தை விளங்கிக் கொள்வதெப்படி?*** | ***$3.50*** |
| ***வியாக்கியானப் பிரசங்கம்*** | ***$3.50*** |
| ***கிறிஸ்தவ இறையியல்*** | ***$4.00*** |
| ***போல் யொங்கி சோவின் நான்காவது பரிமாணம்*** | ***$5.00*** |

**வங்கிக் காசோலைகளை நியூசிலாந்து டாலரில் “Bible Lamp” என்ற பெயரில் அனுப்பவும். அனுப்ப வேண்டிய முகவரி :**

Bible Lamp, P O Box 62 159, Sylvia Park, Auckland, New Zeland.

# கிறிஸ்தவக் கோட்பாடுகள்

*கேள்வி 37: நீதிமானாக்குதலாலும், மகவேட்பாலும், பரிசுத்தமாக்குதலாலும் இவ்வுலக வாழ்வில் நாம் எத்தகைய பலன்களை அனுபவிக்கிறோம்?*

*பதில்: நீதிமானாக்குதலாலும், மகவேட்பாலும், பரிசுத்தமாக்குதலாலும் இவ்வுலக வாழ்வில் நாம் தேவ அன்பின் நிச்சயத்துவத்தையும், மனச்சாட்சி யின் சமாதானத்தையும், பரிசுத்த ஆவியின் ஆனந்தத்தையும், கிருபையில் வளர்ச்சியையும், கிறிஸ்தவ வாழ்வில் இறுதிவரை நிலைத்திருக்கக் கூடிய விடாமுயற்சியையும் பலன்களாக அனுபவிக்கிறோம்.*

*(ரோமர் 5:1, 2, 5; நீதி 4:18; 2 பேதுரு 1:10)*

**விளக்கக்குறிப்பு:** தேவ கிருபையின் மூலம் நாமடை யும் பலன்கள் நீதிமானாக்குதல், மகவேட்பு, பரிசுத்த மாக்குதல் ஆகியவை மட்டும் அல்ல. அப்படியானால், இவ்வினாவிடைப் போதனை இவற்றை மட்டும் ஏன் குறிப்பிட்டுக் கூற வேண்டும்?

1. ஏனெனில் இவை மூன்றும் இரட்சிப்பிற்கு அத்தியா வசியமானவை. எவரும் இவற்றை அடையாமல் இரட்சிப்பை அனுபவிக்க முடியாது. எல்லா விசுவாசி களும் நீதிமான்களாக்கப்பட்டு, மகவேட்பின் பலன்களை அனுபவிக்கிறார்கள். எல்லா விசுவாசிகளுமே பரிசுத்த மாக்குதலின் பலன்களை அனுபவிக்கிறார்கள். ஆனால், எப்போதும் எல்லா விசுவாசிகளும் கிருபையின் ஏனைய பலன்களை அனுபவிக்கிறார்கள் என்று கூற முடியாது.

2. கிருபையின் ஏனைய பலன்களான சமாதானம், நிச்சயத்துவம், ஆனந்தம் போன்றவை இம்மூன்றிலிருந் தும் பெறப்படுவதாகவும் அல்லது இவற்றோடு சேர்ந்து கிடைப்பனவாகவே உள்ளன. கிருபையின் ஏனைய பலன்கள் தனித்து நிற்காமல் ஒரு விதத்தில் நீதி மானாக்குதல், மகவேட்பு, பரிசுத்தமாக்குதல் ஆகிய இம் முக்கிய பலன்களில் தங்கியிருப்பதாகவே உள்ளன.

இதற்கு எடுத்துக்காட்டாக இரண்டு உதாரணங்களைப் பார்ப்போம். சமீபத்தில் கிறிஸ்தவரான ஒருவருக்கு, தன்னைக் கடவுள் முன்குறித்திருக்கிறார் என்பதை அறிந்து கொள்ள முடியும் என்ற உண்மை புரியாம லிருக்கலாம். இதைப்புரிந்து கொள்ளுமளவுக்கு அவருக்கு வேதத்தில் தேர்ச்சி இல்லாமலிருக்கலாம். இதனால்தான் வேதத்தின் பல பகுதிகள் அத்தகையவர் கள் இரட்சிப்பின் நிச்சயத்துவத்தை அடைய வேண்டும் என்று போதிக்கின்றன (2 பேதுரு 1:10; 1 யோவான் 5:13; எபிரேயர் 6:11). அடுத்ததாக, இன்னுமொருவர் இரட்சிப்பின் நிச்சயத்துவத்தை அடைந்திருந்தபோதும், பின்பு தனது இரட்சிப்பைக் குறித்து சந்தேகிக்கும் சூழ்நிலை ஏற்படலாம் (சங். 51:8, 12; சங்.77 போன்றவை). சங்கீதப் புத்தகத்தில் இத்தகைய அனுபவங்களைக் குறித்து வாசிக்கலாம். ஆனால், தேவன் நீதிமானாக்கப்பட்டு, மகவேட்பை அடைந்து பரிசுத்தமாக்குதலில் ஈடுபட்டுள்ளவர்களை ஒரு போதும் முற்றாக நிராகரிக்கமாட்டாராதலால், இவ்வாறாக தமது இரட்சிப்பின் நிச்சயத்துவத்தை தற்காலிகமாக இழந்திருப்பவர்கள் மறுபடியும் அதனைப் பெற்றுக் கொள்வார்கள். இந்நிச்சயத்துவத்தை அவர்கள் மறுபடியும் அடைய முயற்சி செய்வது அவர்களது கடமை. தமது அழைப்பையும், தெரிந்து கொள்ளுதலை யும் உறுதியாக்கும்படியான முயற்சிகளில் ஈடுபடுவதன் மூலம் இதை அவர்கள் செய்வது அவசியம். இங்கே, நாம் மறுபடியும் தேவன் ஒரு விசுவாசியில் தனது கிருபையின் மூலம் செய்யும் செயலுக்கும், விசுவாசி யினுடைய பொறுப்புக்குமிடையில் இருக்கும் முக்கிய மான தொடர்பைக் குறித்து அறிந்து கொள்ளுகிறோம். ஒரு விசுவாசி தற்காலிகமாகத் தனது கடமைகளில் இருந்து தவறினாலும், தேவன் ஒரு போதுமே மெய்யான விசுவாசிகளைக் கைவிட மாட்டார். ஆனால், தவறிழைத்துள்ள விசுவாசி தனது வழிகளை மாற்றித், தவறுகளைத் திருத்தி, மீண்டும் ஜாக்கிரதையாக இருக்கும்வரை, தான் தேவனின் பிள்ளை என்ற நிச்சயத்துவத்தைக் கொண்டிருக்க மாட்டார்.

இத்தகைய நிச்சயத்துவத்துடன் தொடர்புடைய இன்னு மொரு பயன் நமது மனச்சாட்சியின் சமாதானமாகும். பரிசுத்த ஆவியில் நாமடையும் ஆனந்தம் இன்னு மொன்றாகும். இதனை நாம் பவுலின் போதனைகளில் காணலாம். தான் இரட்சிப்பின் நிச்சயத்துவத்தைக் கொண்டிருப்பதற்குச் சாட்சியாக பவுல் தனது மனச் சாட்சியின் சாட்சியையும் (2 கொரி. 1:12), தனக்குள் காணப்படும் ஆனந்தத்தையும் (2 தீமோ. 1:3) பற்றி விளக்குவதைக் காணலாம். கிறிஸ்து இயேசுவின் பரிகாரப்பலியில் நம்பிக்கை வைத்திருப்பதாலும், கிறிஸ்து செய்துள்ள செயல்களுக்கு நன்றிக்கடனாக, அவரை மகிமைப்படுத்தும் விதமாக தனது வாழ்க்கை யைக் கொண்டுநடத்துவதன் மூலமும் ஒரு விசுவாசி தனது மனச்சாட்சியை சமாதானத்துடன் வைத்திருக்க முடியும். இதுவே ஒரு கிறிஸ்தவனுக்கு ஆவிக்குள்ளான ஆனந்தத்தையும் அளிக்கிறது. கிறிஸ்தவர்கள் ஜாக்கிரதையாகவும், விசுவாசத்துடனும் வாழும்போது இப்பலன்களை அதிகமாக அனுபவிக்கிறார்கள். அவ்வாறு வாழாதபோது இப்பலன்கள் அவர்களில் குறைவாகவே காணப்படும். தாவீது பாவம் செய்தபோது தனது நிச்சயத்துவத்தை மட்டுமல்லாமல், மனச்சாட்சி

யின் சமாதானத்தையும், பரிசுத்த ஆவியின் ஆனந்தத் தையும் இழந்து நின்றான். அதனால்தான், தாவீது தனது பாவங்களை உணர்ந்து அவற்றிற்காக வருந்தி தேவ னுக்குமுன் ஜெபித்தபோது, "இரட்சணியத்தின் சந்தோ ஷத்தை திரும்பவும் எனக்குத் தாரும்" (சங். 51:12) என்று மட்டும் ஜெபிக்காமல், "உமது சமூகத்தை விட்டு என்னைத் தள்ளி விடாதீர்" (சங். 51:11) என்றும், "சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என்னுள்ளத்திலே புதுப்பியும் என்றும்" (சங். 51:10) ஜெபித்தான்.

நாம் இதுவரை பார்த்தவை, ஏற்கனவே நிச்சயமாக ஒரு கேள்வியை நம் மனதில் எழுப்பியிருக்கும். இக்கேள்வி கிறிஸ்தவ சபை வரலாற்றில் அநேக காலங்களாகவே கேட்கப்பட்டுவரும் ஒரு கேள்வியாகும். ஒரு விசுவாசி தனது நிலையிலிருந்து விழுந்துவிட முடியுமா? என்பதே அக்கேள்வி. இதற்கு நாம் ஆம் என்ற பதில் கூற வேண்டும். மெய்க்கிறிஸ்தவர்கள் நிச்சயம் தங்களுடைய ஜாக்கிரதை உணர்விலிருந்தும், விசுவாசத்திலும் இருந்தும் தவறி விட முடியும்; விழுந்துவிட முடியும். ஆனால், ஒரு விசுவாசி நித்திய வாழ்விற்கான தேவ கிருபையையும், கருணையையும் ஒருபோதும் இழந்துவிட மாட்டான். அவன் ஒருபோதும் இரட்சிப்பை இழந்து விட மாட்டான். பெரும் பிரசங்கியான ஸ்பர்ஜன் இதைக் குறித்து பின்வருமாறு விளக்குகின்றார்: ஒரு பெரும் கப்பலில் பிரயாணம் செய்யும்போது கடல் அலைகளின் அசைவால் கப்பல் ஆடும்போது, அதற்குள் ஒருவர் விழுந்து தன்னைக் காயப்படுத்திக் கொள்ள முடியும். ஆனால், தகுந்த பாதுகாப்பைக் கொண்ட அப்பெரும் கப்பலுக்கு வெளியில் அவரால் விழுந்துவிட முடியாது. இவ்வுதாரணம் கப்பலைப் பொறுத்தவரையில் நிச்சய மானதல்ல, ஆனால் தேவ கிருபையைப் பொறுத்த வரையில் மிகவும் உண்மையானதும், நிச்சயமானது மாகும். கிறிஸ்து சொன்னார், "நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன்; அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை, ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக் கொள்வது மில்லை" யோவான் 10:28).

கிறிஸ்தவர்கள் தங்களுடைய கிறிஸ்தவ வாழ்க்கையை ஒருபோதும் இழந்துபோகாமல், அதில் விடாமுயற்சியுடன் தொடர்வார்கள், எனும் வேத சத்தியத்தை நாம் இலகு வான முறையில் விளக்க இதுவரை முனைந்தோம். இவ்வோட்டப்பந்தயத்தில் வெற்றி நமக்கு நிச்சயம். பரிசு கிடைப்பதும் நிச்சயம். ஆனால், பந்தயத்தில் நாம் ஒட வேண்டியதும், பெரு முயற்சி எடுத்து, துன்பங்கள் அனுப வித்து ஒட வேண்டியதும் நமது கடமையும், அவசியமான துமாகும். இது இலகுவானதாக இருக்காது. பரிசு எப்படி யும் கிடைக்குமே என்று எவரும் ஓடாமல் இருந்து விடவும் முடியாது. ஓடுகிறவர்கள் கடினமாக ஓடவேண் டியது அவசியம்.

இக்கோட்பாட்டைப்பற்றிச் சிலர் கொண்டுள்ள தவறான எண்ணங்களுக்கு நாம் பதிலளிப்பது அவசியம்:

**1.** உள்ளூர் திருச்சபையில் அங்கத்தவர்களாக இருப்ப வர்கள் எல்லாமே பரலோகத்தை அடைந்து விடுவார்கள் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. திருச்சபை கிறிஸ்துவை விசுவாசிப்பவர்களை மட்டுமே அங்கத்தவர் களாக்க கொண்டிருக்க வேண்டுமென்று வேதம் எதிர் பார்க்கிறது. நம்மையும் மீறி, தவறாகப் போலியானவர்கள் சபைக்குள் நூழைந்துவிடலாம். இதனைத் தவிர்க்குமுக மாகவே சபையில் ஒழுங்கைக் கடைப்பிடிக்க வேண்டிய அவசியத்தை வேதம் வற்புறுத்துகிறது. போலியானவர்கள் சபையில் தொடர்ந்திருக்கக் கூடாது. இத்தகையோர் ஆரம்பத்தில் கிறிஸ்தவர்களைப் போல் தோற்றமளித்து சபைக்குள் நுழைந்தவர்கள், ஆனால், உண்மையில் சபையில் இருக்கத் தகுதியற்றவர்கள்( 1 யோவான் 2:19).

**2.** அடுத்ததாக, மெய்யான கிறிஸ்தவர்கள் தங்கள் வாழ்க்கையில் எத்தனைப் பாரதூரமான செயல்களைச் செய்தாலும், எதைச் செய்தாலும், இறுதியில் இரட்சிப்பை அடைவார்கள் என்ற எண்ணம் முற்றிலும் தவறானது. இவ்வினாவிடைப்போதனை கிறிஸ்தவர்கள், தங்களு டைய கிறிஸ்தவ வாழ்க்கையில் தொடரக்கூடிய விடா முயற்சியை நீதிமானாக்குதல், மகவேட்பு, பரிசுத்தமாக்கு தல் ஆகியவற்றின் மூலமே பெற்றுக் கொள்கிறார்கள் என்று போதிக்கின்றது. இதை வேறு விதத்தில் கூறி னால், மனந்திரும்பி கிறிஸ்துவை விசுவாசித்து, பரிசுத்த ஆவியைத் தன்னில் கொண்டிராத எவரிலும் கிறிஸ்த வர்களிடம் மட்டுமே காணக்கூடிய இவ்விடாமுயற்சியைக் காணமுடியாது. ஆவியினால் இருதயம் சுத்திகரிக்கப் பட்ட ஒரு கிறிஸ்தவன் தொடர்ந்தும் பாவத்தில் வாழ மாட்டான். பரிசுத்த ஆவியைத் தன்னில் கொண்டுள்ள ஒரு மனிதனால் தொடர்ந்தும் பாவத்துடன் சமாதானமாக இருக்க முடியாது. கிறிஸ்தவன் பாவத்துடன் போராடு கிற மனிதன். சில வேளைகளில் அவன் வீழ்கின்ற போதிலும், தன்னை வீழ்த்திய பாவத்திலிருந்து விடு தலை அடைந்து சமாதானத்தைப் பெறும்வரை அவன் ஓய மாட்டான்.

**3.** மெய்யான கிறிஸ்தவர்கள் தங்களுடைய சொந்த முயற்சியால் இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதல்ல இக்கோட்பாட்டின் போதனை. கிறிஸ்தவர்கள் தங்களுடைய பரிசுத்த வாழ்க்கையில் கடும் முயற்சி எடுத்து வளர்வார்கள் என்று வேதம் போதிப்பது உண்மையே. கிறிஸ்தவர்கள் தங்களுடைய முன் குறித்தலையும், விசுவாசத்தையும் காத்துக் கொள்ள ஜாக்கிரதையாய் இருக்க வேண்டுமென்பதும் உண்மை தான். பரிசுத்த வாழ்க்கை வாழ்வதற்கு முயற்சி எடுக் காத எவரும் நித்திய இரட்சிப்பை அடைய மாட்டார்கள் என்பதும் உண்மைதான். ஆனால், வேதம் தேவனே தமது தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும், செய்கையையும் நம்மில் உண்டாக்குகிறவாரயிருக்கிறார் என்று கூறுகிறது. நாம் கிறிஸ்தவ வாழ்க்கையில் எடுக்கும் எல்லா முயற்சிகளுக்கும், அதன் வெற்றிக்கும் பின்னால் இருப்பவர் கர்த்தரே. "யோவான், தேவனால் பிறந்த எவனும் பாவம் செய்யான். . . அவன் தேவனால் பிறந்தபடியால் பாவம் செய்யான்" என்றும் கூறுவதைப் பார்க்கிறோம் (1 யோவான் 3:9). இங்கே குறிப்பிடப் பட்டுள்ள பாவம் "மரணத்திற்கேதுவான பாவமாக" இருக்க வேண்டும் (1 யோவான் 5:16). அத்தைய பாவத்தை கிறிஸ்துவை அறியாதவர்களே செய்வர். கிறிஸ்தவனால் ஒருபோதும் அத்தகைய பாவத்தை செய்ய முடியாது. தேவனால் பிறந்தவனை பொல்லாங் கன் தொடான் (1 யோவான் 5:18). ஆகவே, நாமடையும் வெற்றிகள் எல்லாவற்றிக்கும் காரணமாக கிறிஸ்துவே இருப்பதால் அவரை நாம் மகிமைப்படுத்த வேண்டும்.

# எண்ணங்கள் !

திருமறைத்தீபத்தின் மூலம் பல நல்ல ஆக்கங்களை நீங்கள் அளிப்பதற்கு எமது பாராட்டுக்கள். கடந்த இரண்டு வருடங்களாக பத்திரிகை எமக்குக் கிடைக்கிறது. தொடர்ந்து அனுப்புங்கள். இத்துடன் அனுப்பும் காணிக்கையை ஊழியத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளவும்.

*ஜோன் பெஞ்ஜமின், சிங்கப்பூர்*

சமீபத்தில் தூத்துக்குடியில் திருமறைத்தீபம் பிரதியைக் கண்ணுற்றேன். சார்ள்ஸ் ஸ்பர்ஜனின் படத்தைப் பார்த்தவுடன் உடனே படிக்க ஆரம்பித்தேன். பால் யாங்கி சோவைப் பற்றிய விளக்கம் ஏற்புடைய நல்ல விளக்கம். வரலாற்றுக் கிறிஸ்தவத்தின் பாதையில், கிருபையின் போதனைகள் எல்லாமே நல்ல பயனுள்ள கட்டுரைகள். பத்திரிகையை எனக்கும் அனுப்பி உதவுங்கள்.

*பா. சொர்னராஜ், தமிழ்நாடு*

திருமறைத்தீபம் இதழ் கண்டேன். விவிலிய விளக்கை என் இல்லத்திலும், பலர் உள்ளத்திலும் ஏற்றி ஒளி பெற்றிட வாஞ்சிக்கிறேன். ஒவ்வொரு இடமும் எனக்குக் கிடைக்க உதவுங்கள்.

**திருமறைத் தீபம் தினம்**
**திருவருள் தாகம் தரும்**
**மறைமுதல் மணிமொழியாய்**
**மனமெலாம் அணிசெயுதே!**

**காலாண்டதில் மலரும்**
**காகித ஆதவனே**
**நூலாம் நுதல் பொலிவால்**
**நூற்பாய் திருப்பணியே!**

*கவிஞர் சீராளன், தமிழ்நாடு*

உங்களுடைய பத்திரிகை படிக்கும் வாய்ப்பு கிட்டியது. இதைப்படித்த தில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். உள்ளதை உள்ளபடியே, எவ்வித தடையுமின்றி வேதத்தின் அடிப்படையில் அநேக காரியங்களை வெளிப்படுத்தி வருகிறது குறித்து மிகவும் சந்சோசம். ஆவிக்குரிய வரங்களைக்குறித்த போதனைகள் மிகவும் தெளிவாக உள்ளன. திருமறைத்தீபத்தை எனக்கும் அனுப்பி வையுங்கள்


*பாக்கியராஜ், தமிழ்நாடு*

நண்பர் ஒருவர் மூலமாக தற்செயலாக உங்கள் பத்திரிகையை வாசிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. வாசித்து மிகவும் பயனும், மகிழிச்சியும் அடைந்தேன். எத்தனையோ கிறிஸ்தவ பத்திரிகைகளின் மத்தியில் ஓர் இறையியல் ஆழமுள்ள பத்திரிகையைப் பார்க்க முடிந்ததே என்து மகிழ்ச்சிக்குக் காரணம். தமிழ் உலகிற்கு திருமறைத்தீபம் வருவது கடவுளின் கிருபையே. பத்திரிகையை எனக்கும் அனுப்பி வையுங்கள்.

*ஜி. சுந்தரராஜா, ஸ்ரீ லங்கா*

பத்திரிகை கிடைத்தது. அதன் மூலம் அநேக ஆசீர்வாதமான விளக்கங்களைக் கண்டறிந்து கொண்டேன். இது எனக்கு மட்டுமில்லாமல் எனது சபையாருக்கும் மிகவும் ஆசீர்வாதமாக இருக்கிறது. ஆறு அறமான விதிகள் அருமையிலும் அருமை.

*அ. தானியேல் அருள்ராஜா, ஸ்ரீ லங்கா*



## உள்ளே . !


1. 1 கொரிந்தியர் 12-14

3. கூடில்லாத குருவிகள்

4. ஜோன் கல்வின்

5. கிருபையின் கோட்பாடுகள்

6. பரிசுத்த வேதாகமம்

7. வில்லியம் கேரி

8. கிறிஸ்தவக் கோட்பாடுகள்

9. எண்ணங்கள் !